PUBLIC LIBRARY JAFFNA

விலை ரூபா 1-00

G.C.E. A/L
விஞ்ஞானம் - வர்த்தகம் - கலை
வினு விடை மீட்டல்
(DAY CLASS)
புதிய வகுப்புகள்
இன்று 23-2-1983 ஆரம்பம்
BOND
INSTITUTES
யாழ்ப்பாணம். (6261)

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 மாசி 11 ஜ. அவ். 9 இதழ் 13

யாழ்ப்பாணம் புதன்கிழமை 23—2—83

அறிவித்தல்
ZOOLOGY
திரு. A. தங்கராசா
B. Sc. Hons.)
மணிக்கூட்டு வீதியில் இதுவரை
நடைபெற்ற வகுப்புகள்
23-2-83 முதல்
ஆஸ்பத்திரி வீதியில் உள்ள
Bond Institutes-ல்
நடைபெறும்
6294

★ கோப்பாயில் நேற்றுப் பிற்பகல் ஏற்பட்ட பரபரப்பு -

# 'ஆலால்'மீது துப்பாக்கிச் சூடு!

# ஒரு குண்டு அகற்றப்பட்டது!

## சைக்கிள் இளைஞர் கைவரிசை; ஜீப்புக்கும் துப்பாக்கிவேட்டு!

- ஏ. வி. மாணிக்கம் -

கோப்பாய் எம். பி. யும், யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்வியங்காட்டில் உள்ள அவரது இல்லத்தில் இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் சுமார் 4 மணியளவில் நடைபெற்றது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

"திரு. ஆலாலசுந்தரம் நேற்று மதிய உணவை முடித்துக்கொண்டு சற்று நேரம் ஓய்வெடுத்துக்கொண்டார். பின்னர் தமது வீட்டிலுள்ள தொலைபேசியில் பலருடன் தமது அலுவல்கள் குறித்துத் தொடர்புகொண்டு உரையாடிக் கொண்டிருந்தார்.

"வீட்டின் வெளி மண்டபத்தில் ஒரு பெண்ணும், வேறொருவரும் அலுவலாக வந்திருந்தனர். பிற்பகல் 3-30 மணி இருக்கும். மூன்று இளைஞர்கள் மண்டபத்துக்குள் வந்து அங்குள்ள ஆசனத்தில் அமர்ந்திருந்தனர்.

"தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்த எம். பி. திரு. ஆலாலசுந்தரம் தொலைபேசியை வைத்துவிட்டு முன்னர் வந்திருந்த பெண்ணுடன் உரையாடினார். பின்னர், வந்திருந்த மூன்று இளைஞர்களுள் ஒருவர் எழுந்து நின்றதும் அவர்களில் ஒருவர் முதலில் ஆங்கிலத்திலும் தொடர்ந்து தமிழிலும் 10 நிமிடமளவில் எம். பி.

(8ம் பக்கம் பார்க்க)

## 'அமிர்' கண்டனம்

(கொழும்பு)

"சிறுவயது முதற்கொண்டே தமிழினத்தின் உரிமைப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து, உத்தம தொண்டனாக விளங்கிய 'ஆலாலு'க்கு எக்காரணத்தைக் கொண்டும் சுடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி, தமிழினத்தின் வருங்கால வாழ்வில் அக்கறையுள்ளவர்கள் அனைவரினாலும் கண்டிக்கப்படவேண்டிய தொன்றாகும். ஆட்... ...த்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடித்த கதைபோல, எங்கேயோ ஆரம்பித்த வன்முறை ... தலைவர் ஒருவரைக் குறிவைக்கும் நிலைக்கு வந்துவிட்டமை; தமிழ் மக்கள் எல்லோரையும் விழிப்புறச் செய்யவேண்டும்".

[8ம் பக்கம் பார்க்க]

## பரு. பெற்றோல்நிலைய கொள்ளை: 6 சந்தேக நபர்களுக்கு தலா 5000 ரூபா பிணை!

(புலோலி)

பருத்தித்துறை பெற்றோல் நிலையக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்களில் 6 பேர், தலா 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

பருத்தித்துறை நீதவான் கே கணபதிப்பிள்ளை முன்னிலையில் பிணைமனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கடந்த மாதம் 1-ம் திகதி நடந்த கொள்ளைச் சம்பவத்தின்போது சந்தேகநபரான கே ரஞ்சன் என்பவர் பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இவரை விசாரணை செய்த பொலிசார் விசாரணையின் போது கிடைத்த தகவலைத் தொடர்ந்து சந்தேகநபர்களான வீ செல்வரத்தினம், எஸ். சந்திரசேகரம், எஸ் இரத்தினம், எஸ். சிவரத்தினம், எஸ். அல்பிரட், கே. செல்வரத்தினம், ஏ. ஐயாத்துரை, எஸ் பொன்னுத்துரை, பி துரைராஜசிங்கம் ஆகியோரைக் கைது செய்தனர்.

சந்தேகநபர்களான கெ.ரஞ்சன், வி செல்வரத்தினம் ஆகியோர் பிணையில் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது.

மற்றும் 8 சந்தேகநபர்களில் ஏற்கனவே இருவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர் மற்றும் 6 சந்தேக நபர்களும் தலா 5000 ரூபா பிணையில் செல்ல நேற்று அனுமதிக்கப்பட்டனர் (௧)

## உபாலி விமான சிதைவுகள் கடலில் மிதக்கின்றன?

(கொழும்பு) மெடானுககு அப்பால் சுமத்திரா தீவில் அறுபது மைல் தூரத்தில் மீனவர்களால் உபாலி விமானத்தின் சில்லு கண்டெடுக்கப்பட்ட இடத்தில், நாளை இந்தோனேஷியா கடற்கண்ணி கப்பல் தேடுதலை நடத்தும்.

### கடைசிச் செய்தி

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப்பெற்ற செய்திகளின்படி மெடானிலிருந்து பன்னிரண்டு மைல் தூரத்தில் கடலில் விமானத்தின் சிதைவுகள் காணப்

[8-ம் பக்கம் பார்க்க]

## 1, 2, 3, 6-ம் எதிரிகளின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளலாம்!

### நீர்வேலி கொலை, கொள்ளை வழக்கு; விசாரணைக்குள் விசாரணையில் தீர்ப்பு

(இ. கந்தசாமி)

நீர்வேலி கொலை, கொள்ளை வழக்கின் 1ம், 2ம், 3ம், 6ம் எதிரிகள் பொலிசாருக்குக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை விசாரணையில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளலாம் என்று கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு சி எல் ரி. மூனமலே நேற்றுத் தீர்ப்பளித்தார்.

10-8-81லும், 20-8-81லும் ஏ.எஸ்.பி. லால் மெண்டிஸுக்கு 1ம் எதிரி நடராசா தங்கவேல் அல்லது தங்கத்துரை அளித்த வாக்குமூலத்தையும்,

1?-4-81ல் ஏ. எஸ். பி. ஹென்றி பெரேராவுக்கும், 11, 12,-4-81ல் ஏ எஸ். பி. கனகசிங்கத்திற்கும், 2ம் எதிரி செல்வராசா யோகச்சந்திரன் அல்லது குட்டிமணி அளித்த வாக்குமூலத்தையும்,

10-4-81ல் ஏ. எஸ். பி. ஜயராம்பதிக்கு 3ம் எதிரி செல்லத்துரை சிவசுப்பிரமணியம்

(8ம் பக்கம் பார்க்க)

## இருநாள் கம்பன் விழா இன்று நல்லையில் ஆரம்பம்

### 'தேவனு'க்கும் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைக் கம்பன்கழகத்தின் கம்பன் விழா இன்றும் நாளையும் நல்லூரில் நடைபெறவுள்ளது நல்லை-ஆதீனக் கலா மண்டபத்தில் விழா நடைபெறும்.

கழகத்தின் முக்கியஸ்தராக விளங்கிய அமரர் தேவனுக்கும், கம்பன் கழகங்களின் பிதாமகரான 'கம்பனடிப்பொடி

[8ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## தேவை

திருநெல்வேலியில் உள்ள கற்பூரத் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள 30 வயதிற்குட்பட்ட பெண்பிள்ளைகள் உடன் தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு நேரில் வரவும். த. மகாலிங்கம், நம்பர் 2, பிள்ளையார் ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு (தபாற் பெட்டியடி, திருநெல்வேலி (6289)

நன்கு அனுபவம் உள்ள மெசின் மைன்டர் ஒருவர் உடன் தேவை. மேலும் இரவு வேலை செய்ய (Night Shift) இரு மெசின் மைன்டர்கள் உடன் தேவை. ஆர். எஸ். அச்சகம் யாழ்ப்பாணம். [6280]

யாழ். ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் மருத்துவ மாணவனுக்கு சாப்பாட்டுடன் தங்குவதற்கு ஒரு வீட்டில் இடம் தேவை. ஆஸ்பத்திரிக்கு அண்மையில் இருத்தல் வேண்டும். செல்வநாதன், ஆர். எஸ். அச்சகம் யாழ்ப்பாணம். 6281

பெயின்டிங் வேலையில் நல்ல அனுபவமுள்ளவர் தேவை. இரும்பு அலுமாரி, உருக்கு தளபாடங்களுக்கும் பெயின்டிங் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும். அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வரவும், Burhani Industries and Stores, 79/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 6284

தட்டெழுத்து, கணக்கியல் அறிவுடைய பெண் விற்பனையாளர் தேவை. ஆங்கிலம், தமிழ் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். விவாகமானவராயும் இருத்தல் வேண்டும். சான்றிதழ் பிரதிகளுடன் தபால் மூலம் விண்ணப்பிக்கவும். Burhani Industries and Stores, 79/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 6283

யாழ். நகரில் ஆரம்பிக்கப்படவுள்ள நவீன ஹோட்டல் ஒன்றுக்கு வெயிட்டர், பழரசம், ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்கள் தேவை அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். ஜயா. சச்சிதானந்தம் 222/4 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (6285)

## தேவை

484, ஆஸ்பத்திரி வீதி' யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலமான ஸ்தாபனத்திற்கு கீழ்க்கண்ட ஊழியர்கள் உடனடியாகத் தேவை. நம்பிக்கையும், திடகாத்திரமும் கொண்ட நடுத்தர வயதுள்ள லொறிச்சாரதி- முன் அனுபவம் விரும்பத்தக்கது பிணைப் பணம் அவசியம். நற்சாட்சி பத்திரங்களுடன், சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட விண்ணப்பங்களை எதிர்பார்க்கும் ஊதியம் குறித்து விண்ணப்பிக்கவும். குளிர்சாதனப் பெட்டிகள் திருத்துபவர்கள் இதில் அனுபவமுள்ளவர்கள் தாங்கள் எதிர்பார்க்கும் ஊதியத்தைக் குறித்து நற்சாட்சி பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். குளிர்சாதனப் பெட்டிகள், அலுவலக இயந்திரங்கள் பழுதுபார்ப்பதில் அனுபவம் பெற விரும்புபவர்கள்- ஆற்றலுள்ளவர்களுக்கும், வேலைபழகும் காலத்திற்கு ரூபா இரண்டாயிரம் செலுத்த விருப்பமுள்ளவர்களுக்கும் மாத்திரமே முன்னுரிமை வழங்கப்படும். சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட விண்ணப்பங்களை, நற்சாட்சி பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். 6286

## தேவை

யாழ். நகரில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தை பொறுப்புடன் நடத்த நம்பிக்கையானவர் தேவை, பிணைப்பணம் செலுத்தக் கூடியவர் விண்ணப்பிக்கவும். நிலையத்தில் தங்கி வேலை செய்பவருக்கு முதலிடம் அளிக்கப்படும். இத்துடன் பலசரக்கு கடைக்கு பையன்கள் தேவை. P. அந்தோனிப்பிள்ளை, 50, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 6252

## விற்பனைக்கு

3½ பரப்பு வீடு கட்டக்கூடிய பனை, மா, முதலிய பிரயோசனங்கள் கிணறு ஆகியவற்றுடன் வல்வெட்டிக்குறிச்சியில் விற்பனைக்கு உண்டு. பிரித்தும் விற்கப்படும். விபரங்களுக்கு கடிதமூலம் தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: விளம்பர இல: 6273 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். (6273)

சாவகச்சேரி கண்டிறோட் 190/- ம் மைலுக்கருகில் 4 பரப்புக்காணி வசதியான வீட்டுடன் விற்பனைக்குண்டு. பொ. பா. சுவாமிநாதஐயர், ஐயர் லேன், நுணாவில் கிழக்கு 6251

## வைத்தியம்

மனநோய், வலி, அல்சர், சருமநோய்கள் எவ்வளவு நாட்பட்டதாயினும் பார்த்து உத்தரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். ஜெயந்தி வைத்தியசாலை, 218/5 பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 6127

## பயிற்சி

றேடியோ. டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங் எலக்ரிக்கல் வயறிங், மோட்டார் மெக்கானிசம், Hotel Management, English. செய்முறைப் பயிற்சிகளுடன் மீண்டும் ஆரம்பம் 27-02-83. விபரம் நேரில், The School of Computer Studies 52/1, கனகரத்தினம் கட்டிடம் (வீனஸ் றெக்கோடிங் பார் மேல்மாடி) ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 6228

## குத்தகைக்கு

No. 1 அலர், 25 H. P மோட்டார் 16 மூடை அவியக்கூடிய பொயிலர், தனித்தனி 54 மூடைகள் கொள்ளக்கூடிய தொட்டிகளுடனும், குத்தகைக்கு உண்டு. விபரங்கட்கு K. பாலகிருஷ்ணராசா, பாலபவனம் வதிரி, கரவெட்டி [மாலி சந்திக்கும் - வதிரிச்சந்திக்கும் இடையில்] (6293)

## WANTED

Wanted immediately a Well experienced Accounts Clerk With minimum of 10 Years experience. Conversant wlth Labour payments and preferably with Industrial experience, working knowledge in English Typing will be an added qualification Salary negotiable Apply before 28-2-1983. to the Managing Director, Vimal Aluminium Limited, Kayts Road, Allaipiddy. 6291

## ஸ்தம்பிதம்

(மன்னார்)

மன்னார் கச்சேரியில் இயங்கி வரும் பிறப்பு, இறப்பு பதிவுகாரர் அலுவலகத்தில் பிறப்பு இறப்பு பத்திரங்கள் வழங்கும் வேலை கடந்த இருவாரங்களாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இவ்வலுவலகத்தில் கடமையாற்றும் சிற்றூழியர் ஒருவர் சுகவீன விடுமுறையில் சென்றுள்ளதாலேயே பிறப்பு, இறப்பு பத்திரம் வழங்கும்வேலை ஸ்தம்பிதமடைந்துள்ளது.

## மீண்டும் திறக்கப்பட்ட

(மன்னார்)

மன்னார் தெட்சணா மருதமடு கிராமத்தில் மூடப்பட்ட நிலையிலுள்ள நெசவு நிலையம் மீண்டும் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திரு கே. கோபாலரட்ணம் மேற்கொண்டு வருகிறார்.

இந் நெசவுநிலையத்தில் நெசவு வேலையில் ஈடுபடுத்துவதற்கென பத்துப்பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்று பருத்தித்துறை

மரணசாதனமில்லாத காலஞ்சென்ற கரவெட்டியைச் சேர்ந்த சின்னப்பு அமிர்தநாதரின் அசையும், அசையாச் சொத்துக்கள் தொடர்பாக.
சின்னப்பு அமிர்தநாதர் கைம்பெண் செல்லமணி லீனப்பிள்ளை,
'இராஜவாசா'
கன்கொல்லை,
கரவெட்டி.
—விண்ணப்பதாரர்

தத்துவ நியாயாதிக்கம்
வழ. இலக்கம்: 1161 / ரி

எதிர்

1. அமிர்தநாதர் மரியதாஸ் செல்வநாதர்
2. அமிர்தநாதர் மகள் எவறெஸ்ற் கிறீனி
3. அமிர்தநாதர் மகள் மரிய அசெம்ரா
4. அமிர்தநாதன் எட்வேட் அமலநாதன்
5. அமிர்தநாதர் மகள் நொயலா லிசி
6. அமிர்தநாதன் டயஸ் லோயலா வின்சி

எல்லோரும், 'இராஜவாசா'
கன்கொல்லை,
கரவெட்டி.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச் சொத்தை நிர்வகிப்பதற்கான வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனமற்ற சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது அக்கறை உள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டுவைகாசிமாதம்5ம்திகதி மு. ப. 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றூன தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1983ம் ஆண்டு மாசி மாதம் 10ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
என். செல்வராஜா,
பதிவாளர்.

திரு. க. அரியநாயகம்,
சட்டத்தரணி. 6277

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற விஷ்ணுசுந்தரம், பாலசுந்தரம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தினதும், உரிமைப் பொருட்களினதும் விடயத்தில்,

—மரணமெய்தியவர்.
திருமதி ஞானேஸ்வரி பாலசுந்தரம், 65, யாழ்ப்பாண வீதி, வல்வெட்டித்துறை.
—விண்ணப்பகாரர்.

மரணசாதன நியாயாதிக்கம்:
இல: 1163/ ரீ

எதிராக
பராயமற்றவர்கள்:

1. பாலசுந்தரம் மகள் மாலதி
2. பாலசுந்தரம் பிரதீபன்
3. பாலசுந்தரம் பதீபன்
4. சிற்றம்பலம் விஷ்ணு சுந்தரம் யாவரும் இல: 65, யாழ்ப்பாண வீதி, வல்வெட்டித்துறை

—எதிர்வாதிகள்

மேலே இலக்கம் கொண்ட மரணசாதனமில்லா மரணச் சொத்தினதும், உரிமைப் பொருட்களினதும் விடயமாக வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் ஆதனங்கட்கும், ஆஸ்திகளுக்கும் பரிபாலன அதிகாரத் தத்துவப் பத்திரம் பெறுவதற்கு மேற்படி மன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு மாசி மாதம் 25ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இம்மன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றூனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றீர்.

1983ம் ஆண்டு மாசி மாதம் 21ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
வி. செல்வராஜா,
பதிவாளர்.

வரைவு:
க. சோ. சிவனருள்சுந்தரம்,
விண்ணப்பகாரரின்
சட்டத்தரணி. 6282

## பகுதிநேர நிருபர்களுக்கு சம்பள நிர்ணயம்

புதுடில்லி, பெப் 22

இந்தியாவில் பகுதிநேரப் பத்திரிகை நிருபர்களின் மாத ஊதிய அடிப்படை 240ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று ராஜ்யசபையில்மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் ஆனந்த் பிரசாத் சர்மா தெரிவித்துள்ளார். (உ)

## யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை அறிவித்தல்

1983-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ந் திகதி காலை 10-00 மணிக்கு யாழ். அபிவிருத்திச் சபைப் பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலைப்பகுதி) அவர்களால் கிளிநொச்சித் தொகுதியில் இருக்கும் கராச்சிக் கிராமத்தில் இராமியப் பாலம் அமைப்பதற்கு. பெருந்தெருக்கள் திணைக்களம், கட்டிடத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் அரசாங்கத்திணைக்களங்களில் ரூபா 100,000,00க்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினம் காலை 10-10க்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் ரூபா 100-00 வைப்புப் பணமாகவும் ரூபா 25-00 கிரயமாகவும் யாழ், அபிவிருத்திச் சபைத் தலைமைச் செயலகத்தில் செலுத்துவதன் பேரில் 1983ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ந் திகதி மாலை மூன்று மணிவரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

மேலும் தேவையான விபரங்கள் பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலைப் பகுதி) அவர்களின் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அன்ரன் அல்பிரட்,
பிரதிச் செயலாளர்,
(நிர்வாகம், சட்டம்,
வேலைப்பகுதி)
யாழ். அபிவிருத்திச்சபை.
உள்ளூராட்சி உதவி
ஆணையாளர் திணைக்களம்,
கண்டிவீதி, யாழ்ப்பாணம்.
21-02-1983, 6287

## யாழ் மாவட்டத்தில் வேலை வாய்ப்பு

ஓட்டோ றிக்சோ ஓடுவதற்கு நல்ல அனுபவமுள்ள சாரதிகள் தேவை. கார், மோட்டார் சைக்கிள் லைசென்ஸ் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். தகுந்த நற்சாட்சிப் பத்திரங்கள் அவசியம். முழு விபரங்களுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு உடன் விண்ணப்பிக்கவும்.

375/12, நாவலர் வீதி,
"தமிழகம்"
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (6290)

## பிரான்ஸ் வழியாக

இத்தாலி, பெல்ஜியம் விசாவுடன்
பிரான்ஸ், கனடா, திரிப்பொலி
டப்ளின், நோர்வே

ஆகிய நாடுகளுக்கு மிக விரைவில் விமானப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்க:

**"CROSS TRAVEL SERVICE"**

2-வது தொடர்மாடிக் கட்டிடம்,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
6265

# அஸாமில் பிணக்காடு!

## கிராமங்களுக்குச் சென்ற இந்திரா கண்ணீர்விட்டார்!

புதுடில்லி, பெப். 22

**இனக்கலவரங்களால் பிணக்காடாகி சிதைந்துபோயிருக்கும் அஸாம் கிராமங்களுக்கு விஜயம்செய்து நிலைமைகளை நேரில் பார்வையிட்ட பிரதமர் இந்திராகாந்தி கண்ணீர்விட்டழுதார்! இப்பகுதிகளில் பிரமபுத்திரா பள்ளத்தாக்கிலுள்ள கிராமங்களிலேயே பெருமளவு கொலைகள் நடைபெற்றுள்ளன.**

பிணங்கள் தெருவோரங்களிலும் பெருமளவில் காணப்படுகின்றன. மீட்பு வேலைகள் நடைபெறுகின்றன. இப்படு கொலைகளுக்கு அஸாம் மாநில ஆதிகுடிகளே காரணமாகும்.

இவ்வாறு கடந்த திங்கள் பிரதமர் இந்திராவின் அஸாம் மாநில விஜயத்தின்போது உடன்இருந்த செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அஸாம் மாநில வன்செயல்களினால் ஏற்பட்ட இழப்புகளின் நிவாரணத்துக்குப் பிரதமரின் விசேட நிதியத்தில் இருந்து 50 லட்சம் ரூபாவைப் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கொடுத்துள்ளார்.

கடந்த திங்கள் பிரதமர் இந்திராகாந்தி அஸாம் மாநில நிலைமையை நேரில்அறியச் சென்று; வன்முறை இடம்பெற்றகிராமங்களையும், உதவி முகாம்களையும் பார்வையிட்டார். பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல்கூறி அவர்களுக்கு முழுமையான மறுவாழ்வுக்கான வசதிகளை அளிக்க உத்தரவிட்டார். பாதிப்புக்கு உட்பட்டவர்களின் நிலைமைகளையும்உயிர்சேதங்களையும் நேரில் கேட்டு மனமுருகியவராக கண்ணீர் சிந்தியதாக உடன்இருந்த பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் இந்திராகாந்தி ஹோகாட்டி விமானநிலையத்தில் நடத்திய உயர்அதிகாரிகள் நிவாரணப் பணிகளுக்கான ஆலோசனைக் கூட்டத்தில்; மறுவாழ்வுக்கு வேண்டிய முழுஉதவிகளையும் மத்திய அரசு வழங்கியுள்ளதாகவும், அதற்கான நடவடிக்கைகளில் தாமதமின்றி ஈடுபடுமாறு உயர்அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார். (உ)

## மதுரையில் தீ!

மதுரை, பெப். 22

மதுரையில் 220 குடிசைகள் தீக்கிரையாகியுள்ளன மேலும் பல குடிசைகள் அரைகுறையாக எரிந்துள்ளன. ஒரு குடிசையில் தீயில் வெந்து ஒரு குழந்தை மாண்டுள்ளது.

இத் தீ விபத்தை அணைப்பதில் 3 தீ அணைக்கும் லொறிகளும் தீயணைப்புப்படையினரும் முழுமையாக 3மணிநேரம்போராடியே தீயை அணைக்க முடிந்தது தீயினால் பாதிக்கப்பட்ட குடிசை வாழ்மக்கள் உதவி முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

## "பத்திரிகைகள் மக்கள் குரலாக இருக்கவேண்டும்"

சென்னை, பெப். 22

''அரசியலில் தலையிட்டு நிர்வாகத்தில் அரசியல் செல்வாக்கை எனக்கு ஏற்படுத்த விரும்பவில்லை. எனக்கு அரசியலமைப்பின் மூலம் அளிக்கப்பட்ட அதிகாரவரம்பை மீறும் எண்ணமும் இல்லை''

தமிழ்நாடு மாநில ஆளுநர் எஸ். எல். குரானா இவ்வாறு சென்னைநகரில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் சங்கத்தில் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார். தமிழகமாநில ஆளுநர் தொடர்ந்து தமது உரையில் கூறியதாவது:

'தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பிரச்சினை வருவாய் குறைந்த நலிவுற்றவகுப்புமக்களைப் பெருமளவில் பாதித்துள்ளது. இதற்குத்தீர்வுகாணும் முயற்சிலேயே தமிழக முதல் வரையும் மத்திய யூனியன் அரசையும் இணக்கம் காண செய்தேனே அன்றி தி.மு.க. உறுப்பினர் நாஞ்சில் மனோகரன் கூறியதுபோல்அரசியல் பேச்சுவார்த்தையை நான் நடத்தவில்லை. அரசியலில் ஈடுபட எனக்கு விருப்பம் இல்லை

''பத்திரிகைகள் பொதுமக்களின் குரலாகவும், அரசியல்வாதிகளை நெறிப்படுத்தும் கருவிகளாகவும், நிர்வாகத்துக்கு உறுதுணைபுரியும் ஆசானாகவும் விளங்கவேண்டும். பொய்த் தகவல்களை அளித்து சமுதாயக்கட்டுக்கோப்புகளை நாசம் செய்யக்கூடாது. சமூகப் பொருளாதார அரசியல் கட்டுக்கோப்புகளைக் கட்டிஎழுப்புவதிலும், நெறிப்படுத்துவதிலும் பத்திரிகைகள் தம்பணிகைத் தூய்மையாகச் செய்ய வேண்டும். இப்பணிகளிப்பில் நிருபர்களின் செயல்பாடுகள் பிரதானமாக இடம்பெறுகிறது. நிருபர் தொழில் இன்றைய உலகில் முதன்மை பெற்றுள்ள தூய்மையான தொழிலாகும்'' என்றார். (உ)

## தமிழகத்தில் 1000 இளைஞர் கைது!

### அ. தி. மு. க. வுக்கு எதிராக ஊர்வலம்!!

சென்னை, பெப். 22

தமிழ்நாடு மாநில அரசின் ஆட்சிப்பொறுப்பை அ. தி. மு. க.விடமிருந்து அகற்றுமாறு தீவெட்டி ஊர்வலம் நடத்த முற்பட்ட தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸைச்சேர்ந்த 1000 பேர் தமிழ்நாடு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கள் தமிழ்நாடு மாநில அரசுக்கு எதிராக 70 பேர் கொண்ட தீவெட்டி ஊர்வலத்தை நடத்த முற்பட்டிருந்த இளைஞர்காங்கிரஸ் கட்சியின் தலைவர் கே. தங்கபாலு, கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் 7 பேர் உட்பட நூற்றுக்கணக்கான தொண்டர்கள் சென்னையிலும் ஏனைய பகுதிகளிலும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையில் 200 பேரும், திருச்சிராப்பள்ளியில் 3 பெண்கள் உட்பட 52 பேரும், பாண்டிச்சேரியில் 96 பேரும், புதுக்கோட்டையில் 100க்கும் மேற்பட்டோரும், ஏனைய பகுதிகளில் நூற்றுக்கணக்கான தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸைச் சேர்ந்தோர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் பலர் கைதுசெய்யப்படவுள்ளதாகவும் தமிழ்நாடு தலைமைப் பொலிஸ் கமிஷனர் தெரிவித்தார்.

[7-ம் பக்கம் பார்க்க]

## இந்திரா காங்கிரஸ் முன்னணியில்!

புதுடில்லி, பெப். 22

அஸாம் மாநிலம், மேகாலாய ஆகிய இடங்களில் நடந்த பொதுத் தேர்தல்களில் இதுவரை அறிவிக்கப்பட்ட முடிவுகளில் ஆளும் இந்திரா காங்கிரஸ்கட்சியே முன்னணியில் நிற்கிறது.

மேகலாயவில் 60 உறுப்பினர்களைக்கொண்ட சட்டப்பேரவைக்கான பொதுத்தேர்தல் முடிவுகளில் இதுவரை அறிவிக்கப்பட்ட 50 தொகுதி முடிவுகளில் ஆளும் இந்திரா காங்கிரஸுக்கு 20 இடங்கள் கிடைத்துள்ளன. ஏனைய 30 இடங்களை 3சுயேட்சை உறுப்பினர் உட்பட பல கட்சிகள் பெற்றுள்ளன.

அசாம் மாநிலத்தில் 126 உறுப்பினர்களைக்கொண்டசட்டப்பேரவைக்கான பொதுத் தேர்தல் முடிவுகளில் முன்பு போட்டியின்றி 4 இடங்களைப் பெற்ற இந்திராகாங்கிரஸ் கட்சிக்கு இதுவரை வெளிடப்பட்ட 40தொகுதிகளின் முடிவுகளில் 35 இடங்களைக்கைப்பற்றியுள்ளது.

அஸாம் மாநிலத்தின் பொதுத்தேர்தலில் வாக்குப்பதிவு நடைபெற்ற ஒரு வாக்குச்சாவடியில் 64000 வாக்காளரில் 4000பேர் மட்டுமே வாக்களித்துள்ளதாக மத்திய தேர்தல் கமிஷனர்அலுவலகம் தெரிவித்தது. (உ)

## விமானக்கடத்தல்காரருடன் மோல்டா பிரதமர் பேச்சு

லண்டன், பெப். 22

கடத்தப்பட்டு மோல்டா விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் போயிங் 727 லிபியா விமானக்கடத்தல்காரருடன் மோல்டா பிரதமர் தனிப்பட்ட ரீதியிலான பேச்சுக்களை நடாத்தி வருகிறார்.

160 பிரயாணிகளுடன் உள்நாட்டுப்பிரயாணத்தின்போது இனந்தெரியா நபர்களால் கடத்தப்பட்டு, மோல்டா விமான நிலையத்திலெரிபொருளுக்காக போயிங் - 727 விமானம் தரையிறக்கப்பட்டது.

இவ்விமானத்துக்கு எரிபொருள் வழங்க மோல்டா விமானக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் மறுத்து விமானத்தை பொலிஸ்-இராணுவ படைகளினால் சுற்றிவளைத்துப்பாதுகாத்து வருகின்றனர்.

கடந்த இரவுவிமானத்துக்கு எரிபொருள் தரப்படாவிடில் விமானத்தை குண்டுவைத்துத் தகர்த்து விடப்போவதாக கடத்தல்காரர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஆயினும் எரிபொருள் இதுவரை வழங்குவதற்கு மோல்டா விமானக் கட்டுப்பாட்டு உயர் அதிகாரி மறுத்துள்ளார்.

இந்நிலைமையிலேயே மோல்டா பிரதமர் விமானக் கடத்தல் காரருடன் தனிப்பட்ட பேச்சுக்களை நடத்திவருகின்றார். (உ)

## அணு ஆயுதப்போர்மூண்டால் விளைவுகள் எப்படி இருக்கும்

### விஞ்ஞானிகள் தரும் பயங்கரத் தகவல்

மாஸ்கோ, பெப். 22

அணு ஆயுதப்போர் மூண்டால் அதன் விளைவுகள்எப்படி இருக்கும் என்பது பற்றி பல் வேறு நாடுகளையும் சேர்ந்த விஞ்ஞானிகளின் குழு ஒன்று, இரண்டாண்டு காலம் ஆராய்ந்து தயாரித்த அறிக்கையை சுவீடிஷ் விஞ்ஞானப் பேரவையிடம் சமர்ப்பித்துள்ளது.

''அணு ஆயுதப் போர்மூண்டால் இராணுவத்தினர் தங்களிடம் உள்ள அணு ஆயுதங்கள் அத்தனையையும் பயன்படுத்த வேண்டிய தேவை இராது. உலகத்தை அழிப்பதற்கு, இப்பொழுது குவிக்கப்பட்டுள்ள அணு ஆயுதங்களில் சுமார் பாதியே போதும், போரில் இறங்கும் தரப்புகள் ஒன்றை ஒன்று அணு ஆயுதங்களால் தாக்கிக் கொள்ளத் தொடங்கியவுடனேயே 75 கோடி மக்கள் மடிவார்கள். சிறிது காலம் கழித்துமருத்துவ உதவி இல்லாத காரணத்தால் மற்றும் 35 கோடிப் பேர் இறப்பார்கள். இவர்களைத் தவிர மற்றும் கோடிக் கணக்கானவர்கள் கதிரியக்கத்தின் விளைவாகவும், காயங்களாலும் முடமாகி விடுவர். அவர்களில் 20 சத விகிதம் பேர்பிறர் உதவியின்றி வாழ முடியாது'' என்று இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''அணு ஆயுதங்களை முதலில் பயன்படுத்துவதில்லை என்று சோவியத் யூனியன் ஒருதலைப்பட்சமாக அறிவித்திருப்பது போல், சபதம் செய்து கொள்ளுமாறு அணு ஆயுதங்கள் வைத்திருக்கும் நாடுகளின் அரசுகளை வற்புறுத்துவது அந்நாடுகளது மக்களின் முதற் கடமை எல்லா அணு ஆயுதச்சோதனைகளையும் நிறுத்துங்கள். அணு ஆயுதக்குவிப்பை இப்பொழுது உள்ள அளவோடு நிறுத்துங்கள். உலகத்தில் அணு ஆயுதம் வெடிக்காமல் செய்யுங்கள். அணு ஆயுத உற்பத்தியைத் தடுத்து கையிருப்பில் உள்ள அணு ஆயுதங்களை அழியுங்கள் என்று விஞ்ஞானிகளின் மேற்படி அறிக்கை கூறுகிறது.

## சமாதான உறவுகளை வலியுறுத்தும் 'பிராக்' பிரகடனம்

மாஸ்கோ, பெப். 22

அமெரிக்கா ராணுவவெறிக் கொள்கையைப் பின்பற்றுகிறது. ஆனால் சோவியத் யூனியனும் அதனுடன் கூட்டுச் சேர்ந்துள்ள சோஷலிஸ நாடுகளும் சமாதானம், சர்வதேச பந்தோபஸ்து, பதற்றத் தணிவு என்னும் பாதையில் செல்லுகின்றன'' என்று 'பிராவ்தா' தலையங்கம் எழுதியுள்ளது.

பிராக்கில் நடைபெற்ற 'வார்சா' ஒப்பந்த நாடுகளது அரசியல் ஆலோசனைக் கூட்டம், ஓர் அரசியல் பிரகடனத்தை வெளியிட்டுள்ளது. அணுஆயுத யுத்தப் பேரழிவை நோக்கிச் செல்லுதல் என்ற பாதைக்கு, ஓர் உண்மையான மாற்றுப் பாதையைப் 'பிராக் பிரகடனம்' முன் வைத்துள்ளது உலக நிலவரம் எவ்வளவு சிக்கலானதாக இருப்பினும், சர்வதேச உறவுகளில் ஓர் அபாயகரமான கட்டத்தை வெல்வதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. பரஸ்பரம் ராணுவ பலத்தைப் பயன்படுத்தாதிருத்தல், சமாதான உறவுகளைப் பராமரித்

[7ம் பக்கம் பார்க்க]

### மணிவாக்கு

சூரியவெளிச்சம் வரும்பொழுது ஒவ்வொருபொருளும் உள்ளபடி விளங்குகின்றது மனிதன் அருளுக்கு பாத்திரமாகும் பொழுது தனது குறைகளை அவன் நன்கு உணர்கின்றான்.

—அருள் விருந்து

# நமது நோக்கு

## அஸாம் படுகொலை

படுகொலைக்குப் பேர் போன லெபனானை இந்தியாவின் அஸாம் மாநிலம் வென்றுவிட்டதுபோல்செய்திகள் வெளிவருகின்றன.

ஒரு முக்கிய வேறுபாடு: லெபனானில் புதுரகுண்டுகளும் துப்பாக்கிகளுமே திறம்படத் தொழில் புரிந்தன.

அஸாமின் ஆயுதங்கள் அங்கு ஆதிகாலந்தொட்டு வசித்துவரும் ஆதிவாசிகளின் அம்பு வில்லு, கத்தி, கோடரி போன்றவைக்கெட்டிய எதுவும் போல் தெரிகிறது!

இனவெறி பிடித்த ஏழை ஆதிவாசிகள் மத்திய அஸாமில் 500 பேருக்கு மேற்பட்ட இஸ்லாமிய ஆண், பெண், குழந்தைகளை மிக மோசமான முறையில் கொலை செய்ததாக பரபரப்பூட்டும் செய்தி வெளியாகிறது.

இனவெறியென்று சொல்லும் போது அஸாமைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆதிவாசிகள் விவசாயம், தொழில் போன்ற துறைகளில் முன்னேற்றம் காணாமல் அனாதைகள் போல வறுமையில் வசித்துவந்தது இந்திய அரசு அறிந்த உண்மையே!

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினாற்போல, பங்களாதேஷ் அகதிகள் அங்கு அனுப்பப்பட்டது அஸாமில் நீண்டகாலக் கிளர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

பங்களாதேஷின் லட்சக்கணக்கான அகதிகளே கடந்த இந்தோ-பாகிஸ்தான் போருக்குக் காரணமாயிருந்தது அண்மையில் நாம் கண்ட சரித்திர உண்மை.

இந்த யுத்தத்தில் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி கைக்கொண்ட அரசியல், ராணுவமுறை உலகின் பாராட்டைப் பெற்றது. தவிர்க்க முடியாத போரை தக்க வகையில் நடத்திமுடித்தது இந்தியாவுக்கு பெருமை அளித்தது.

இந்தியாவின் எதிர்ப்பு நாடுகள் பொறாமைப்படுமளவிற்கு பிரதமரின்சாமர்த்தியம் சரித்திர மேன்மை பெற்றது.

அஸாமில் குடியேறிய பங்களாதேஷ் அகதிகள் எல்லோரும் முஸ்லிம்இனத்தவரே.

இந்து - முஸ்லிம் கலவரமென்ற கோலம் பொருளாதார தாக்கத்தின் பின்னர் தோன்றிய கோலமென்பதை அறிக.

அடிப்படையில் உள்ளூர் ஏழைக் குடிமக்கள் வெளிவாரியாக வந்த முஸ்லிம் வெள்ளத்தில் அள்ளுப்பட்டதுதான் சரியான படம்.

ஆதி வாசிகள் அரசியல் கிளர்ச்சியில் பயிற்சிபெற்றவர்களல்ல. காணி பூமி வேலை வாய்ப்பு சகலதியில் பறி போன நிலையில், அஸாம் வாலிப சமுதாயம் மாணவ இயக்கம் போன்ற நிறுவனங்கள் மாநில சுயநிர்ணயம் என்ற லட்சியத்தை முன் வைத்து பலத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தின. அஸாம் மாநில அரசு கவிழ்ந்தது, ஜனாதிபதி ஆட்சி நிறுவப்பட்டது.

எந்த நிலையிலும் இந்தியா ஒரு உப கண்டமென்பது மறப்பதற்கில்லை. அஸாம் நிலைமை எள்ளளவும் சீரடையவில்லை. பிரிவினைக் கோஷம் பலமடைந்தது. இதனை என்றும் விரும்பாத பிரதமர் இந்திரா அஸாம் கிளர்ச்சிக்கு அடிபணிந்தால் அகில இந்தியாவிலுமே தனி ஆட்சிக்கு இடமளிப்பதாக அஞ்சி தமதுடைய அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி, கிளர்ச்சிக்கு சவு, இரக்கம் காட்டவில்லை.

இன்று காணப்படும் கண்ராவி இந்தியாவுக்கு மட்டுமல்ல, அகில உலகுக்குமே ஒரு தீரா வசை போல உருவெடுத்திருக்கிறது.

இந்திராவின் 'கடும்பிடி' 'வந்தேறு குடிகளுக்கு' வாக்குரிமை கொடுத்து இன்று நடைபெறும் பொதுத் தேர்தலில் பங்கு பற்றும் வாய்ப்பையும் அளித்திருக்கிறது.

பயங்கர நிலையில் மக்கள் வாக்குச் சாவடிக்கே போக முடியாதநிலை எழுந்திருப்பதால் தேர்தல் முடிவுகள் கருத்தற்றவையெனக் கொள்ள வேண்டும்.

என்றும் தளராத இந்தியப் பிரதமர், எத்தகைய எதிர்ப்பையும் சமாளிக்க முடியுமென்ற நம்பிக்கை கொண்டவர்.

ஆட்சியாளரின் கோணத்தில் இது [illegible] ணுகும் போது பிரதமரின் பிடிவாதம் "பாரத தேசத்தின் ஒருமைப்பாடு" என்ற கோட்பாட்டில் எள்ளளவும் விலக முடியாதென்ற இறுக்கமான கொள்கையில் உருவானது;

இருப்பினும் தீவிரவாதம் அரசியல் பிடிவாதம் எல்லை கடந்த நிலையில் நாகரிக உலகத்துக்குச் சிரிப்புக்கிடமாகப் போவது, இந்தியாவின் இன்றைய துர்ப்பாக்கிய நிலையென்பது தெளிவு. மக்கள் ஆதரவு மாநில ஆட்சி மீண்டும் உதயமாவதே ஒரேஒரு வழி.

அன்று நவகாளிக்கு மகாத்மா காந்தி கால்நடையாகச் சென்று இந்து முஸ்லிம் குரோதத்தை தமது ஆத்மீக ஆளுமையால் அடக்கினார்.

இன்று அஸாமுக்குச் சென்ற இந்திரா ஆத்மீகத்தைவிட, அரசியல் சூழ்ச்சியிலும் அடக்கு முறைகளிலும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

அரசியல் எதிரிகள் வசைபாடும் 'வில்லை' அவர் என்று நாம் வர்ணிக்க ஆதாரம் இல்லை; இருப்பினும் டில்லியில் நடைபெறவிருக்கும் தொல்லைகள் நிறைந்த அணி சேரா மாநாட்டுக்கு தலைமை தாங்கவிருக்கும் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் தலைவி இச்சதிக்காரளானது எவ்விதத்திலும் பெருமைப்படுவதற்கில்லை.

இலங்கையில் உள்ள நாடற்றவர் பிரச்னை:

# தமிழீழம் மூலம் மட்டுமே தீர்வுகாண முடியும்!"

## சென்னை மாநாட்டில் 'அமிர்'

(சென்னை)

"தமிழீழம் ஒன்று உருவாவதன் மூலமே இலங்கையில் உள்ள நாடற்றவர் பிரச்னைக்குத் தீர்வுகாண முடியும்."

இவ்வாறு எதிர்க்கட்சி முதல்வரும் தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு அ. அமிர்தலிங்கம் வலியுறுத்தினார்.

இலங்கை மலையகத்தமிழர் (இந்திய வம்சாவளித்தோட்டத்தொழிலாளர்கள்) உரிமைப்பாதுகாப்பு மகாநாடு சென்னை பெரியார் திடலில் கடந்த 19ம், 20ம் திகதிகளில் கோலாகலமாக நடைபெற்றது

தமிழீழத் தோழமைக்கழகம் இம்மகாநாட்டுக்கான ஏற்பாட்டைச் செய்திருந்தது.

தந்தை செல்வா, ஆதித்தனார், தியாகி முனிசாமி கோவிந்தன், தியாகிநாயர், தியாகி வி. கே. வெள்ளையன், தியாகி எஸ். எஸ். நாதன், தியாகினார் கொல்லை அழகர்சாமி, தியாகி சிவனு - இலட்சுமணன், தியாகி இராமானுஜம், மேதை கே. சி. நித்தியானந்தா, தியாகி நடேசய்யர் ஆகியோர் அரங்குகளில் தமிழ் நாட்டு சட்டத்துறை அமைச்சர், சட்டமன்ற மேலவைக் கொறடா, பலகட்சித்தலைவர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், அறிஞர்கள், சட்டத்தரணிகள், கழகங்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

கடந்த 20ம் திகதி மாலை தியாகி நடேசய்யர் அரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் த. வி. கூட்டணி சட்டத்துறைச் செயலாளர் சட்டத்தரணி செ. சந்திரகாசன், மலையக மக்கள் சட்டத்தரணி ஆர். ஆர். சிவலிங்கம், மலேசியா உ. த. ப. இ. மாசி அண்ணாமலை, மலேசிய பாவலர் காசிதாசன், திரு. கோபாலன் ஆகியோர் கொண்டுவந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழீழத் தோழமைக்கழக இணைச்செயலாளர் திரு. ஏ. எஸ். மணவைத்தம்பி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திரு அமிர்தலிங்கம் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது;

"இலங்கையிலுள்ள மலையகத்தமிழ்த் தொழிலாளர்கள் அங்கிருந்து குடிபெயர்ந்து இந்தியா வந்து மாநிலம் மாநிலமாக வேலைவாய்ப்புத்தேடி அலைவதைவிட இலங்கையில் இருப்பது நலம்.

"இலங்கையில் தமிழ்மக்கள் ஒன்றுபட்டு ஒரு சக்தியாக வாழவேண்டும். தமிழ்தோட்டத்தொழிலாளர்களை ஏனைய தமிழ் மக்கள் மத்தியிலிருந்து வேறுபடுத்தும் முயற்சிகள் கண்டிக்கப்படவேண்டும்.

தமிழ் வாலிபர்கள் மத்தியில் வேறுபட்ட போட்டி மனப்பான்மையை ஒருசாட்டாக வைத்து தமிழ் மத்தியில் பிளவு ஏற்படுத்தக்கூடாது" என்றார்.

மற்றும் தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் க. அன்பழகன், திராவிடர் கழக பொதுச்செயலாளர் தளபதி கி. வீரமணி, முஸ்லிம்லீக் இந்தியயூனியன் மாநிலச் செயலாளர் எம். ஏ. லத்தீப், செல்வன் முரளி பஞ்சாட்சரம் (நியூயோர்க்) ஆகியோரும் சிறப்புரையாற்றினர்.

பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

"இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளி தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குமாறு இலங்கை அரசுக்கு இந்திய மத்திய அரசு வலியுறுத்தவேண்டும்."

"தமிழர்கள் மிகுந்து வாழும் இலங்கை, சிங்கப்பூர், மலேசிய, பர்மா ஆகிய நாடுகளில் தமிழர்களையே இந்தியத் தூதர்களாக நியமிக்கப்படவேண்டும்."

தென்மொழிமறை நிதலின்பனார் நன்றியுரை நிகழ்த்தினார். (மா)

தவக்கால நற்சிந்தனை



## நாம் இவ்வாறு செபிப்போம்

வானத்தில் உள்ள எங்கள் தந்தாய் உமக்கு எங்களையும் எங்கள் தேவைகள், ஆசைகள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள் அனைத்தையும் நன்கு தெரியும். நாங்கள் உம்மிடம் கேட்பது சில சமயங்களில் கிடைக்காத போது மனம் உடைகிறோம். வாழ்க்கையில் வெறுப்படைகிறோம் ஆனால் நாம் கேட்பது கிடைத்தும் உமக்கு நன்றிகூற மறக்கிறோம். உமது சித்தம் எதுவாயிருந்தாலும் அதை நல்ல மனநிலையில் ஏற்பதற்கு வேண்டிய மனதிடத்தை தந்தருளும். எங்கள் வாழ்வுக்கு தேவையான உணவை இன்று போல் என்றும் தந்தருளும் எங்களை பாவத்தில் இருந்தும் தீமையில் இருந்தும் பாதுகாத்து நல்லவர்களாக வாழ வழிவகுத்தருளும்.

அருட்செல்வன் ம. ரூபன்.

## குடும்பத்திட்டத்தில் பயனுள்ள நடவடிக்கை

### இ. கு. தி. சங்கத்தின் 'சாதனை'

"இலங்கை குடும்பத்திட்டச் சங்கத்தின் தலைமை அலுவலக சிகிச்சை நிலையத்தில் மூவாயிரத்து இருநூற்று எழுபத்திரண்டு பேர், தமது குடும்பங்களின் அளவைக் கட்டுப்படுத்துவதற்காக, நிரந்தர சத்திரசிகிச்சை செய்துகொண்டனர். இவர்களில் இரண்டாயிரத்து ஐநூற்று நாற்பத்தியொருபேர் ஆண்கள், மீதி எழுநூற்று முப்பத்திஐந்து பேர் பெண்களாவர். இதைத் தவிர ஐநூற்றுத்தொண்ணூற்று இரண்டு பிள்ளையில்லாத தம்பதிகள். கருவளக் குறைவு சம்பந்தமான ஆலோசனையும், சிகிச்சையும் பெற்றனர் திருமணம், பாலியல்சம்பந்தமான பிரச்னைகளுக்குதீர்வு காண்பதற்காக ஆறாயிரத்து நானூற்றி எண்பத்தியிரண்டு நபர்கள், இ. கு. தி. சங்கத்தினால் வாராந்தம் நடத்தப்படும் மணவியல் ஆலோசனை நிலையத்திற்கு, 1982ல் வருகை தந்தனர்".

கடந்த வருடத்தின் நடவடிக்கைகள் குறித்து, இலங்கை குடும்பத்திட்டச்சங்கத்தின் தகவல், கல்விப்பகுதி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்ட தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

### கிராமிய திட்ட விஸ்தரிப்பு

"இலங்கையில் குடும்பத்திட்டத்துறையின் முன்னோடியான இலங்கை குடும்பத்திட்டச்சங்கம் 1980ல் தனது நடவடிக்கைகளை கிராமிய ஒன்றிணைப்பு, குடும்பசுக நலத்திட்டமாக விஸ்தரித்து. ஆண்டுதோறும் நிர்வாக மாவட்ட அடிப்படையில் சில பின்தங்கிய கிராமங்களை தெரிவு செய்து, குடும்பத்திட்டச் சேவையோடு இதர அபிவிருத்திபணிகளையும் இணைக்கத் தொடங்கியது. 1980 தொடக்கம் 1982வரை முன்னூற்று எண்பத்தியேழு கிராமங்களை சேர்ந்த ஒரு லட்சத்து பதினாறாயிரத்து அறுநூற்று எட்டு பேர்களை குடும்பத்திட்டக் கருத்தடை சாதனமொன்றினை ஏற்கச்செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"குடும்பசுக நல நடவடிக்கைகளுக்காக இலங்கையின் இருபத்திநான்கு மாவட்டங்களிலுமாக, இருநூற்று நாற்பது, பின்தங்கிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட திட்டப்பிரதேசங்களிலான நடவடிக்கைகள் அனைத்தும் வகுப்பதும், அமுலாக்குவதும் பெரும்பாலும் தொண்டர்களின் பொறுப்பாகும்.

### கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகள்

"எமது நாட்டின் மொத்த குடிசனத்தொகையில் சுமார் 85 சத விகிதமானோர் கிராமப்புற மக்கள் என்பதால் கிராமங்களில் வாழ்வோரின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தினால் மட்டுமே, முழுமையான தேசிய அபிவிருத்தியை நாம் காணலாம். இதனை அடிப்படையாக வைத்தே இச்சங்கம் குடும்பத்திட்டக்கல்வி, சிகிச்சை வசதிகளை அளிக்கும் சேவையோடு, இதர சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளையும் இணைத்துள்ளது.

"திட்டக் கிராமந்தோறும் தொண்டர் சேமலாப நிதி சங்கங்களும், மகளிர் அபிவிருத்தி சங்கங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன, கடந்த ஆண்டு அறுபது மகளிர் சங்கங்கள் நாட்டின் பல பாகங்களிலும் அமைக்கப்பட்டன. பல கிராமங்களில் மகளிருக்கான வருவாயை ஊக்குவிக்கும் தொழிற்பயிற்சித்திட்டங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டன. மலசலகூட வசதிகள், சமூக நிலையங்கள், பாதைகள் கிணறுகள் ஆகியனவும் சில கிராமங்களுக்கு வழங்கப்பட்டன. கடந்த நவம்பர்மாதம் நடைபெற்ற ஏழு பிராந்திய தொண்டர் மகாநாடுகளில் சுமார் ஏழாயிரம் தொண்டர்கள் பங்குபற்றினமையும், பல கலாச்சார சிறப்பு நிகழ்ச்சிகளை மேடையேற்றினார்கள், சம்மேளனங்களையொட்டி திட்டக் கிராமம் தோறும், குடும்பத்திட்ட நாடகம், பேச்சு, கவிதை பொது அறிவுப்போட்டிகள் நடத்தப்

(8ம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

# 'உலகம் உய்வதற்கு கம்பராமாயணம் வழிகாட்டுகிறது!'

## கம்பன் விழாவில் பேச்சு

(புலோலி)

"தமிழ்மொழி பக்திக்கு மாத்திரமன்றி இலக்கியத்திற்கும் உரியது என்பதை நாம் கம்பனின் கம்பராமாயணத்தில் கண்டு தெளியலாம். உலகம் உய்வதற்கு கற்பும், அறமும், நீதியும், நெறியும், பண்பும் வழிகாட்டுகின்றன என்பதை கம்பன் கம்பராமாயணத்தின் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார்"

இவ்வாறு வடமராட்சி கம்பன் கழக இரண்டாவதுநாள் கம்பன்விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றிய யாழ். உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு. எஸ். ரீ. மார்க்கண்டு குறிப்பிட்டார். பண்டிதர் இ. கிருஷ்ண பிள்ளை சட்டத்தரணி என். கிருஷ்ணராசா ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள். தொடர்ந்து உரையாற்றிய திரு. மார்க்கண்டு குறிப்பிட்டதாவது:

"கம்பன் படிக்கப் படிக்க திகட்டாத தெள்ளமுதத் தமிழிலே கருத்தாழமும் ஓசைநயமும் கற்பனை எழிலும் நாடகசுவையும், குண ஓவியச் சிறப்பும் விளங்க இராமாயணத்தைப் பெரும் காப்பியமாக இயற்றினார். தமிழ்மக்களுக்குத் தலைசிறந்த இலக்கியபொக்கிஷமாக விளங்கும் கம்பராமாயணம். இலக்கிய நயமனைத்தும் ஒருங்கமைந்த பாரத காவியமாகும். அது இயற்றமிழ் நூலாக மட்டுமல்லாது பல்வேறுவகையான சந்த விருத்தங்களால் இசைத் தமிழ் நூலாகவும், கதாபாத்திரங்களின் உரையாடலால் நாடகத் தமிழ் நூலாகவும் விளங்குகின்றது. அன்றியும் நாடு, நகர், அரசு அமைச்சு, போர், ஒழுக்கம் உலக நடை, உளர்த்தேரியல் பாதர் ஆடவர் தருமம் ஆகியனவற்றைப் பேசுமாற்றால் இலக்கண நூலுமாகும்.

கம்பராமாயணத்தை எல்லோருக்கும் பயன்படச்செய்யும் வழி சுவை குன்றாமல் அதை சுருக்கிக் கொடுப்பதேயாகும். கம்பராமாயணத்தை ஊன்றிப் படித்து அதனை ஆராய்ந்து பார்த்தால் தொல்காப்பியம் முதலான எல்லாச் சங்க நூல்களின் அமைதியும் அதன் கண் பொதிந்து கிடப்பதைக் காணலாம். வடமராட்சி கம்பன் கழகம் இக் கம்பன் விழாவைச் சிறப்பாக நடாத்துவதைப் போலத் தொடர்ந்தும் கம்பன் விழாக்களைச் சிறப்பாக நடாத்த வேண்டும்" என்றார்,

சட்டத்தரணி என் கிருஷ்ணராசா ஆசியுரை வழங்குகையில் குறிப்பிட்டதாவது?

கலை, இலக்கியம் என்பன மனித வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்தவை, கம்பனின் கம்ப இலக்கியம் மக்களின் வாழ்க்கை வளம்படுத்தும் வழிகளைக் காட்டுகின்றது.

"அகில இலங்கை கம்பன் கழகம் தமிழ்மக்களுக்கு அரும்பெரும் தொண்டாற்றிவருகின்றது. அண்மையில் இந்தியாவிலே நடைபெற்ற அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டிலே இலங்கைத் தமிழ் மக்களின் நிலைமைபற்றித் தவறான கருத்துக்களை வெளிக்கொண்டு வந்தபோது அதனை எதிர்த்து எமது மக்களின் உண்மைநிலையை நிலைநிறுத்திக்காட்டிய பெருமை அகில இலங்கை கம்பன் கழகத்திற்கு உண்டு. இதனாலேயே தமிழகமுதல் அமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் எமது அரசியல் தலைவர்கள் ஆகியோர்கூட அறிக்கைகள் விட்டிருந்ததை நாம் காண்போம்.

"தமிழ் மக்களைப்பொறுத்த வரையிலே எங்களுக்கென ஒரு நாடு இருக்கவேண்டும். ஒரு கொடி இருக்கவேண்டும் என்ற நாம் கோரும் இலட்சியத்தை எவராலும் தடைசெய்யமுடியாது. இதற்கு எங்களுடைய பகுதி தமிழ்மக்களின் பங்கு என்ன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது விடுதலைபெறத் துடிக்கும் இனத்தின் சக்திக்கு இலக்கியவாதிகளே ஆணிவேர் அவர்கள் உணர்வைத் தூண்டி அறிவைப்பெருக்கி முன்னெடுத்துச்செல்பவர்கள். கம்பன் இலக்கியம் மக்கள் மத்தியில் பரவவேண்டும். இதனால்எமது எதிர்காலச்சந்ததியினர்பெரும் பயனை அடையவேண்டும். இதற்கு கம்பன் கழகம் தொடர்ந்தும் பணியாற்ற வேண்டும் என்றார். வித்துவான் சி. ஆறுமுகம் தலைமை "இவ்வாறு படைத்தாயே ஏன்" பற்றிகவியரங்கம் இடம் பெற்றது. "கம்பனின் தொண்டு" பற்றி பேராசிரியர் இரா இராதாகிருஷ்ணன் சிறப்புரையாற்றினார். திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் நன்றியுரை வழங்கினார்.

---

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

(மானிப்பாய்)

இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் அதிபர் திரு. பொ. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தமது தலைமையுரையில், கடந்த ஆண்டுபாடசாலை மகாவித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது அபிவிருத்திச் சங்கத்தின்முயற்சியே என்றும் தொடர்ந்தும் வித்தியாலய வளர்ச்சிக்கு மக்களின் ஒத்துழைப்புத் தேவையென்றும் குறிப்பிட்டார். செயலாளரினால் கடந்த ஆண்டுப்பொதுக் கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டு ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

புதுவருட உத்தியோகத்தராக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு பொ. சிவசுப்பிரமணியம், உபதலைவர்: திரு. செ. இலகுநாதன் – பிரதேச சபைத் தலைவர், செயலாளர்: திரு. செ. சோதிப்பெருமாள் ஜே. பி., பொருளார்: திரு. இ. தேவகுமனோகரராசா,

பதினைந்துபேர் கொண்ட நிருவாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

---

## கட்டடங்கள் நிறுவப்படுகின்றன

(சுண்டிக்குளி)

பன்முகவரவு செலவுத் திட்டத்தின் கீழ் நல்லூர் எம்.பி மு.சிவசிதம்பரம் ஒதுக்கிய பத்தாயிரம் ரூபாவினைக் கொண்டு அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் பாலர் பாடசாலைக்கானகட்டடமும், மாதர் சங்கத்திற்கான தும்புத்தொழிற்சாலைக் கட்டமும் நிறுவப் பட்டு வருகின்றன.

இக்கட்டிடங்களின் அமைப்புக்கு அரியாலைப்பகுதியிலுள்ள தொழிலதிபர்களும், பொது நலன் விரும்பிகளும் மேலும் பொருள் உதவிகளைச் செய்து வருகின்றனர். நிலைய உறுப்பினர்கள் சிரமதான அடிப்படையிலேயே கட்டிடங்களை அமைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

---

## சேவை நலன் பாராட்டு

(சுண்டிக்குளி)

அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்காக கடந்த 35 ஆண்டுகளாக உழைத்துவரும் திரு மு. அம்புத்துரையின் சேவை நலன் பாராட்டு விழாவை மேற்படி நிலையத்தினர் நடத்தியுள்ளனர்.

இப்பாராட்டு விழா நிலையத் தலைவர் திரு மூ.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது. திரு அம்புத்துரைக்கு நிலையக் கலைஞர் திரு வி.கே.இரத்தினம் பொன்னாடைபோர்த்தி கௌரவித்தார். திருவாளர்கள் வே ஐயாத்துரை, ந.இராமநாதன், இ. மனோகரன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள்.

---

## மினிபஸ் விபத்தில் 8 பேர் படுகாயம்!

[மன்னார்]

வேகமாக வந்த மினிபஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியதால் மினிபஸ்ஸில் பிரயாணம் செய்த 8 பேர் பலத்தகாயமடைந்ததுடன் மினி பஸ்சும் பெரும் சேதத்துக்குள்ளாகியது. தலைமன்னாரைச் சேர்ந்த நபர் ஒருவருக்குச் சொந்தமான 26 ஸ்ரீ 621 என்ற இலக்கமுடைய மினிபஸ்சே விபத்துக்குள்ளாகியது.

தலைமன்னாரிலிருந்து மன்னாரை நோக்கிவந்த மினி பஸ்சில் 15 பேர் பிரயாணம் செய்தனர்.

---

## ரூபவாஹினியில் இன்று

மாலை 6-00 இன்றைய நிகழ்ச்சிகள்

6-01 எட்டு வயதுக்கும் பன்னிரண்டு வயதுக்கும் உட்பட்ட சிறுவர்களுக்கான (தொடர்) நிகழ்ச்சி.

6-30 வளர்பிறை (முஸ்லிம் நிகழ்ச்சி )

7-00 செய்தி மஞ்சரி(தமிழ்.)

7-14 நாளைய நிகழ்ச்சிகள்.

7-15 விஞ்ஞான (தொடர் நவீனம்.)

8-15 செய்தி மஞ்சரி (சிங்களம்)

8-29 நாளைய நிகழ்ச்சி.

8-30 சிங்கள நாடகம்.

9-00 தமிழ்த் திரைப்படம் —"வாழ்க்கை".

9-30 செய்தி மஞ்சரி (ஆங்கிலம் )

9-45 தமிழ்த் திரைப்படம் (தொடர்ச்சி )

தமிழ்ப்படம் முடிவடையும் வரை இன்றைய ஒளிபரப்பு நீடிக்கும்.

---

## ரூ. 21 லட்சம் செலவில் அபிவிருத்தி வேலைகள்

(மன்னார்)

எருக்கலம் பிட்டிப் பகுதியில் உலக வங்கியின் நிதியுதவியுடன் 21 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படும்

இவ் அபிவிருத்தி வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

இவ் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தும்புத்தொழிற்சாலை, உப்பளம், பிரசவ விடுதி, ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டிடம், முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயக் கட்டிடம், விஞ்ஞான ஆய்வுகூட கட்டிடம், ஹிஜ்ரா பாடசாலைக் கட்டிடம் என்பன அமைக்கப்படுவதுடன் வீதிகளும் திருத்தி அமைக்கப்படும்.

---

## "நிலத்தில்விழுந்த கணவரை எதிரிமீண்டும் தாக்கினர்"

### வீமான்காமம் கொலைவழக்கில் சாட்சியம்

[மாவிட்டபுரம்]

"இறந்த எனது கணவரை எதிரி முதலில் தலையில் தாக்கினார். அந்த தாக்குதலையடுத்து கணவர் நிலத்தில் விழுந்துவிட மீண்டும இரண்டு மூன்று முறை தாக்கினார் வில்லுத்தகடு போன்ற ஆயுதத்தாலேயே எதிரி இறந்தவரை தாக்கினார். அச்சமயம் நான் கூக்குரலிடவே எதிரி அங்கிருந்து ஓடிவிட்டார். அதன் பின்பே ஆட்கள் அவ்விடத்திற்கு வந்தனர், சம்பவத்தின் போது நானும், இறந்தவரும் எதிரியுமே அவ்விடத்தில் இருந்தோம்"

இவ்வாறு வீமன்காமம் குடியேற்றத்திட்ட கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த கொலையுண்டவரின் மனைவி அல்லிக்குட்டி பூமணிகூறினார்.

விமன்காமம் குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த நல்லான் அல்லிக்குட்டி என்பவரை தாக்கி கொலை செய்ததாக வீமன்காமத்தைச் சேர்ந்த கந்தையா சின்னராஜா அல்லது குட்டியன் என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட சமயம் எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர்.ஜே.செல்வரத்தினத்தால் சாட்சியான அல்லிக்குட்டி பூமணிகுறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

அச்சமயம் அவர் கூறியதாவது;—

"இறந்த எனது கணவருக்கும் எதிரிக்கும் கோபதாபம் இருந்ததா என்பதுபற்றி தெரியாது. சம்பவதினம் எதிரி வீட்டிற்கு வந்து அல்லிக்குட்டி என்று இறந்தவரை கூப்பிட்டார் இறந்தவர் எழுந்து வெளியில்போனார். அச்சமயம் வெளியில்தண்ணீர் எடுப்பதற்காக நான்வெளியில் லாம்புடனும், செம்புடனும் சென்றேன். அப்போதே எதிரி இறந்தவரை தாக்குவதைக் கண்டேன். லாம்பு வெளிச்சத்திலும் எதிரி வைத்திருந்த டோர்ச் லைட் வெளிச்சத்திலும் எதிரியை அடையாளம் கண்டேன்.

சம்பவத்தின் பின் இறந்தவருக்கு அறிவு இருக்கவில்லை. தாக்கப்பட்டு இறக்கும்வரை அவர் என்னுடன் கதைக்கவில்லை. சம்பதினம் இறந்தவர் மதுபானம் அருந்தியிருந்தார். தலையில் முதலில் அடிபட்டவுடன் இறந்தவர் ஐயோ என்று கூறிவிழுந்துவிட்டார். அதற்குப்பின் எதுவுமே கதைக்கவில்லை என்றார்.

"சம்பவ தினத்தன்று இறந்தவர் அணிந்ததாகக் கூறப்படும் நீலநிறகோடன்சாரம் சாட்சியிடம் காட்டப்பட்ட சமயம் அவர் அதனை அடையாளம் காட்டினார்.

அடுத்து குணம் நவரத்தினம் என்பவரும் சாட்சியளித்தார்.

மேற்படி இருசாட்சிகளையும் எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர்.ஜே செல்வரத்தினம் குறுக்கு விசாரணை செய்தார்.

நீதிபதி விசாரணையை ஒத்திவைத்தார்.

எதிரிசார்பில் சட்டத்தரணி திருமதி கமலா சொர்ணலிங்கத்தின் அனுசரணையுடன் சட்டத்தரணி ஆர். ஜே செல்வரத்தினம் ஆஜரானார். வழக்காளி தரப்பில் காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு சீ. ஐயாத்துரை, சார்ஜன்ட் வி தியாகராசா ஆகியோர் ஆஜராகி வழக்கை நடத்தினார்கள்.

---

## "மகான்கள் பாதையில் சென்றால் உண்மையான சமுதாயத்தை கட்டி எழுப்பமுடியும்"

(மாவிட்டபுரம்)

"மகான்கள் பற்றி வாயளவில் பேசுகிறோம். ஆனால் சமுதாயம் கீழ்நிலை யடைந்து கொண்டே போகிறது. நமக்கு வழிகாட்டிய மகான்களின் பாதையில் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் மக்கள் வாழத்தலைப்பட்டால் தான் உண்மையான சமுதாயத்தை கட்டியெழுப்பமுடியும்.

இவ்வாறு வீமன்காமம் வடக்கு காந்தி சமூகசேவா சங்க சனசமூகநிலைய 34வது ஆண்டுவிழாவில் கலந்துரையாற்றிய சட்டத்தரணி மூ. திருநாவுக்கரசு கூறினார்.

ஆசிரியர். நா. இராமலிங்கம் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் "வெள்ளைப் பிரம்பு" பற்றி விழிப்புலனற்றோர் சங்க பிரதிநிதி திரு. வி. சுப்பிரமணியம் விளக்கமளித்துப் பேசுகையில் கூறியதாவது:—

பார்வை யிழந்தவர்களுக்கு உலகரீதியாக வெள்ளைப்பிரம்பு அடையாளசின்னமாக விளங்குகிறது. அது பொதுமக்களிடம் உதவிகோரும் சின்னமாகவும் உள்ளது. வெளிநாடுகளில் வெள்ளைப்பிரம்பு பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. வெள்ளைப் பிரம்பைக் காட்டி வீதியால் செல்லும் வாகனங்களைக்கூட நிறுத்த முடியும். வெள்ளைப்பிரம்புடன் செல்பவர்களை வீதியில் கண்டால் மக்கள் பேருதவி புரிவர். ஆனால் நமது மத்தியில் அப்படியானநிலை இல்லை. வெள்ளைப் பிரம்மை மதிக்கும் நிலை இல்லை. நமது மத்தியிலும் வெள்ளைப்பிரம்பை மதிக்கும் நிலையும், பார்வையிழந்தவர்களுக்கு உதவும் மனோபாவமும உருவாகவேண்டும் என்றார்.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி. பி. சச்சிதானந்தம் பேசுகையில் இளைஞர்களது சேவையால் கிராமங்கள் முன்னேற முடியும். காந்திய கொள்கைகளை முன்வைத்து இளைஞர்கள் நல்வழியில் சென்று கிராமத்தை முன்னேற்றவேண்டும்" என்றார்.

சட்டமாணவன் திரு. சு. ஸ்ரீகாந்தலிங்கம் உட்பட பலர் பங்குபற்றிய விவாத அரங்கு, கலை நிகழ்ச்சி, என்பனவும் இடம் பெற்றன.

# "வாழ்க்கைக்குப் பெரிதும் உதவும் கம்பராமாயணம்"

## கம்பன் விழாவில் தமிழகப் பேராசிரியர்

(புலோலி)

"அரசியல்வாதி தொடக்கம் சாதாரண வாழ்க்கை வாழ்பவர் வரைக்கும் கம்பராமாயணம் மிக முக்கியம் வாய்ந்தது. வாழ்க்கையிலே நேர்மையைக் கடைப்பிடிப்பவனுக்கு கம்பராமாயணம் துணைசெய்யும். நேர்மை தப்பியவர்களுக்குக் கம்பராமாயணம் பகையாகும்."

இவ்வாறு வடமராட்சி கம்பன் கழகத்தின் முதலாவது நாள் கம்பன்விழாவிலே கலந்துகொண்டு உரையாற்றிய திருச்சி தேசியக் கல்லூரி தமிழ்துறைப் பேராசிரியர் கலாநிதி இரா. இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார். பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய பரிவதவர்த்தனி கலா மண்டபத்தில் திரு. மு. பொ. வீரவாகு (ஜே. பி.) தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை திரு. ஆர். நாகரத்தினம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். வடமராட்சி கம்பன் கழக தலைவர் சட்டத்தரணி ஆர். உருத்திரா வரவேற்புரையும் வித்துவான் க. ந வேலன் ஆசியுரையும் வழங்கினார்கள். தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டதாவது:-

இலங்கைக்கு நான் வந்ததும் எனது நாட்டினை மறந்துவிட்டேன். இலங்கைவாழ் தமிழ்மக்கள் எனது நாட்டையே மறப்பித்து விட்டார்கள். இலங்கை மிக அழகான நாடு இலங்கைத் தமிழ்மக்கள் மிகச் சிறந்தவர்கள். சீதை கூட இலங்கைக்கு வந்தபின் தான் சீதையின் அழகு பொலிவுற்றது.

"இலங்கை மக்கள் கம்பராமாயணத்தில் விஞ்சிய சிறப்பு ஆண்மை வீரத்திற்கு என்றும் பெண்மை கற்பிற்கு என்றும் இரண்டையும் மெய்ப்பித்துள்ளார்கள்.

"அரசியல்வாதிகள் தொடக்கம் சாதாரன வாழ்க்கை வாழ்வோர் வரைக்கும் நடைமுறையில் கம்பராமாயணம் மிக இன்றியமையாததாக இருக்கின்றது.

வாழ்க்கையிலே நேர்மையாக வாழ்கின்றவனுக்குக் கம்பராமாயணம் துணையாகும் ஆனால் நேர்மைதப்பி வாழ்கின்றவனுக்குக் கம்பராமாயணம் பகையாகும் வாழ்க்கையில் கூப்புதலின்றி மலர்ச்சியேஎன்றும் இருக்கவேண்டும். கம்பராமாயணத்தை நன்கு கற்றுணர்பவர்களின் வாழ்க்கை மலர்ச்சியடையும்.

வடமராட்சிப்பகுதியிலே கம்பன் விழாவை நடாத்தி இப்பகுதி மக்களின் வாழ்க்கை மலர்ச்சியடையச் செய்வதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி கம்பன் கழகம் மேற்கொண்டுவருவது பாராட்டப்பட வேண்டியதாகும். கம்பன்விழாவைத் தொடர்ந்து நடாத்த வேண்டும்.

### இறைவனே தலைவன்

வாழ்க்கையில் இன்றியமையாதன இரண்டு விடயங்களாகும். அவைபிறப்பும் இறப்பும்' மனிதன் இவற்றை மறந்து விடுகிறான். தனக்கு மேல் இன்னொருவன் இல்லாதவனே தலைவன் அவன் தான் இறைவன்.

கம்பன் கழகத்தலைவர் சட்டத்திரணி உருத்திரா வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது.

எமது வாழ்க்கையில் கம்பராமாயணம் மிக உன்னதம் வாய்ந்தது. எனவே மக்கள் ஒவ்வொருவரும் கம்பராமாயணத்தை நன்கு அறிந்து கொள்ளவேண்டும்.

வடமராட்சி கம்பன் கழகம் கம்பன் புகழை வெளிப்படுத்தி கன்னித்தமிழை வளர்ப்பதற்கானபல நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. இக்கம்பன் கழகம் மேலும் வளர்ச்சி அடைந்து வரவும் அதனால் இப்பகுதி மக்கள் அனைவரும் நன்மையடைவதற்குச் சகலரும் ஒத்துழைப்பும், உதவிகளும் வழங்கவேண்டும். இன்று எமது கம்பன் விழாவில் திருச்சி தேசியக் கல்லூரி பேராசிரியர் இராதாகிருஷ்ணன் கலந்து கொள்ளக் கிடைத்தது எமக்குக்கிடைத்த பெரும்பாக்கியமாகும்.

திரு. மு. பொ. வீரவாகு தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:-

வடமராட்சிப் பகுதியில் கம்பன் கழகம் ஒன்றில்லாதது இப்பகுதி மக்களுக்குப் பெரும் குறைபாடாகவிருந்தது. இக் குறைபாட்டை நீக்கி மக்களுக்கு இலக்கிய அறிவை ஊட்டுவதற்காக இக் கம்பன் கழகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியில் கம்பன் கழகத்தை அங்குரார்ப்பணம் செய்வதற்கு பேருதவிகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்ட அகில இலங்கைக் கம்பன்கழக உறுப்பினர்களான திரு. ஜெயராஜ், திரு. குமாரதாஸ், திரு. நந்தகுமார் ஆகியோருக்கு வடமராட்சி பகுதி மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இக் கம்பன்விழாவிலே எமது அழைப்பை ஏற்று இங்கு வருகைதந்துள்ள பேராசிரியர் இரா. இராதாகிருஸ்ணன் அவர்கள் இக் கம்பன்விழா மூன்றுநாள் நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளக் கிடைத்தது எமக்குக் கிடைத்தது வரப்பிரசாதமாகும்.

"கம்பராமாயணத்தில் விஞ்சிய சிறப்பு ஆண்மை வீரத்திற்கா? பெண்மைக் கற்பிற்கா? என்ற விடயம் பற்றி பேராசிரியர் இரா இராதாகிருஷ்ணனை நடுவராகக்கொண்டு பட்டிமன்றம் இடம்பெற்றது. திரு. கே. தங்கராசா நன்றியுரை வழங்கினார்.

---

## திருக்கேதீஸ்வர சிவராத்திரி

(மன்னார்)

திருக்கேதீஸ்வரத்தில் மார்ச் மாதம் 12ம்திகதி நடைபெறும் மகா சிவராத்திரி உற்சவத்தில் கலந்துகொள்ளவென ரயில் மார்க்கமாக வரும் யாத்திரிகளுக்கு அன்னதானமும், குடிபானமும் வழங்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை ரயில்வே திணைக்கள யாத்திரிகள் தொண்டர்சபை மேற்கொண்டு வருகிறது

ரயில் மார்க்கமாக வரும் யாத்திரிகர்களுக்கு மதவாச்சி, செட்டிக்குளம் ஆகிய ரயில் நிலையங்களில் வைத்து உணவுப் பொட்டலங்களும் குடிபானமும் வழங்கப்படும்

இத்துடன் திருக்கேதீஸ்வரம் ரயில் நிலையத்தினருகில் அன்னதானம் வழங்கப்படுவதுடன் தண்ணீர்ப் பந்தலும் நடத்தப்படும்.

---

## மடுமாதா உற்சவம்

(பண்டத்தரிப்பு)

மடுமாதா ஆலயத்தில் ஆடி, ஆவணி மாதங்களில் நடைபெறும் உற்சவங்களைப்போல இவ்வருடம் முதல் பங்குனி மாத உற்சவத்தையும் அரசாங்கம் வர்த்தமானி மூலம் பிரகடனப் படுத்தியுள்ளது. இவ் உற்சவம் பங்குனிமாதம் 11ம் திகதி (11-03-83 தொடக்கம் 15ம் திகதி (15-03-83) வரை நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து மடுமாதா ஆலய அத்தியட்சகர் வண. பிதா ஜே. பி. தேவராஜா அடிகளார் யாழ். மாவட்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி அவர்களுக்கு விடுத்தவேண்டுகோளை அடுத்து இந்த உற்சவகாலத்தில் முதலுதவிச் சிகிச்சை முகாம் ஆலய வீதியில் பக்தர்களின் நலனை முன்னிட்டு இயங்கவுள்ளது.

---

## ★ இனக்கலவர இரட்டைக் கொலைவழக்கு

# எதிரிகள் மீதான குற்றத்தை வாபஸ்பெற ஆலோசனை

[வவனியா)

தெட்சிணாமடு இனக்கலவர இரட்டைக்கொலை வழக்கின் நான்கு எதிரிகள் மீதான குற்றப்பத்திரிகை வாபஸ் பெறுவது குறித்துச் சட்ட மாஅதிபரிடம் ஆலோசனை நடத்துவதற்கு அரசதரப்பு சட்டத்தரணி நீதிமன்ற அனுமதியைப் பெற்றுள்ளார்.

இதனை அடுத்து நீதிமன்ற அழைப்புவரும்போது நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு எதிரிகள் பணிக்கப்பட்டனர்.

1977-ம் ஆண்டு இனக்கலவரத்தின்போது மன்னார் மடுக் கோவிலுக்கு அண்மையில் உள்ள பண்ணையில் வைத்து திருமதி வண்டலின் பெரேரா [வயது 42], பாலிதா பிரான்கிஸ் பெரேரா [வயது 16] ஆகியோரைக் கொலைசெய்ததாகவும் சுதர்மன்போல் பெரேராவைக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும் அவர்களுடைய வீட்டுக்குத் தீ வைத்ததாகவும் தெட்சிணாமருதமடுவைச் சேர்ந்த திரு. சிவசுப்பிரமணியம், அ. சுப்பிரமணியம், கு. ஆனந்தன், த. இசவீரசிங்கம் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்ட இவ்வழக்கு வவனியா மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கின் முக்கிய சாட்சிகளான சுதர்மன்போல் பெரேராவும், பெஸ்டஸ் பெரேராவும் எட்டுத் தவணைகளுக்கு நீதிமன்றம் வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

மார்ச் மாதம் 30-ம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நீதிபதி திரு. ஜே ஏ. ஜி ஆசீர்வாதம் முன்னிலையில் நடைபெற்ற வழக்கில் அரசதரப்பில் திரு. ஐ. ஞானதாசனும் எதிரிகள் தரப்பில் திரு. கனகமனோகரனும் ஆஜராகியிருந்தனர். (இ)

---

# கிளிநொச்சி செய்திகள்

கே. வி. திருலோகமூர்த்தி

### ஒரு ஆசிரியருடன் இயங்கும் அதிசயம்

கோணாவில் அரசினர் பாடசாலை ஒரு ஆசிரியருடனே பல வருடங்களாக இயங்கிவருகிறது இந்த ஆசிரியரே அதிபராகவும் செயற்படுகிறார். ஐந்து வகுப்புக்களைக்கொண்டதுப் பாடசாலையில் இந்த ஆசிரியரும் லீவில் சென்றால் பாடசாலையும் மூடப்பட்டுவிடும். மலையகத்தில் இருந்து குடிபெயர்ந்து வந்தோரின் பிள்ளைகளே கூடுதலாக இங்கு கல்வி பயில்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. [வி]

### சாரணர் விழா

கிளிநொச்சி மாவட்ட சாரணர் விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றபோது சிறப்பம்சமாக பரந்தனில் இருந்து வட்டக்கச்சிவரை சாரணர்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி ஒன்று நடைபெற்றது. இதில் பளை, சாவகச்சேரி, பூநகரி, கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் சாரண மாணவர்கள் பங்குபற்றினார்கள். போட்டி ஒழுங்குகளை திரு. பொன் சபாபதி செய்திருந்தார்.

### தொலைக்காட்சிப் பெட்டி கையளிப்பு

கிளிநொச்சி கனகபுரம் அரசினர் வித்தியாசாலையில் தொலைக்காட்சிப்பெட்டி வழங்கும் வைபவம் சிறப்பாக நடைபெற்றது. கிளிநொச்சி எம்.பி திரு. ஆனந்தசங்கரி சமூக சேவையாளர் திரு. இ. கிருஷ்ணராசா ஆகியோர் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டனர்.

### வான் விபத்தில் நால்வர் காயம்

பரந்தனில் மினி பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயமடைந்தனர். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி வரும்போதே பிரஸ்தாப வான் மதகொன்றில் மோதி விபத்துக்குள்ளானது. வானும் பலத்த சேதத்திற்காளாகியது. காயமடைந்தோர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

### றோட்டரிக் கழகம் கவலை

றோட்டறியனும் சமய சமூக சேவையாளருமான ஐ. இராசநாயகத்தின் மறைவையொட்டிப் பரந்தன் – கிளிநொச்சி றோட்டறிக் கழகத் தலைவர் திரு. ஆ. குலசேகரம்பிள்ளை வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் இராசநாயகத்தின் மறைவு கிளிநொச்சிப் பகுதிக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு' என்று குறிப்பிட்டுள்ளார்.

### புதிய நீதவான்

கிளிநொச்சி நீதிமன்றத்தின் புதிய நீதவானாக திரு. கதிரவேற்பிள்ளை கடந்த 14ம் திகதி பதவி ஏற்றார். இங்கு கடமையாற்றிய நீதவான் திரு. ஜோகநாதன் பதவிஉயர்வு பெற்றுக் கல்முனை மாவட்ட நீதிமன்றத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

### பாடசாலைகளில் மாதிரித் தோட்டம்

யுனெஸ்கோ ஸ்தாபனத்தினர் கிளிநொச்சித் தொகுதியில் மாதிரித் தோட்டங்களைப் பாடசாலைகளில் ஏற்படுத்தியுள்ளனர். இதற்கெனக் கனகாம்பிகைக் குளம் வித்தியாலயம், திருவையாறு பாடசாலை, கரியாலை நாகபடுவான் பாடசாலை ஆகியனவற்றில் மாதிரித்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கனகாம்பிகைக்குளம் வித்தியாசாலையில் அதிபர் பொன் இலக்கநாயகம் தலைமையில் இதன் அங்குரார்ப்பண வைபவம் இடம்பெற்றது.

### நாடக விழா

கிளிநொச்சித் தொகுதிக் கலாச்சாரப் பேரவையினர் அடுத்த மாதம் 5ம் திகதி நாடக விழாவொன்றை றொட்றிக்கோ மைதானத்தில் நடத்த ஒழுங்குசெய்துள்ளனர். பிரஸ்தாப கழகத் தலைவர் திரு. இ. கிருஷ்ணராசா ஜே. பி. தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் சிறப்பம்சமாக வானொலி நாடகமான வரணியூரானின் 'ஆசைமச்சான்' சமூக நகைச்சுவை நாடகம் மேடையேறவுள்ளது. விழாவிற்கான ஒழுங்குகளை கலாச்சாரப் பேரவை அமைப்பாளர் திரு. பொன்னம்பலம் செய்துள்ளார்.

### யானையிடமிருந்து தப்பினார்

யானை ஒன்றின் வெறியாட்டத்திற்கு இலக்கான தபாற் சேவையாளர் மயிரிழையில் உயிர் தப்பினார். கிளிநொச்சி தொண்டமான் நகரைச் சேர்ந்த எஸ். நடராசா என்பவர் தாம் கடமையாற்றும் கிளிநொச்சிப் பிரதமதபால் அலுவலகத்தை நோக்கி கடமைக்காக சைக்கிளில் செல்லும்போது யானை ஒன்று இடைமறித்துத் தாக்கத் தொடங்கியதாம். தாக்குதலின் போது சைக்கிளை விட்டுவிட்டு நடராசா ஓடிவிட்டாராம். யானைசைக்கிளை துவம்சம் செய்தது. சிறுகாயத்திற்குள்ளான தபாற்சேவையாளர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறுகிறார். (வி)

---

## கிளிநொச்சி சென்திரேசா சாதனை!

(பரந்தன்)

கிளிநொச்சி சென்திரேசா மகளிர் கல்லூரி, பொதுத்தராதரப் பத்திர உயர்தர கலைப்பிரிவுப் பரீட்சைக்குத் தோற்றிய 19மாணவிகளில் 13மாணவிகள் சித்தியடைந்துள்ளனர்.

இக்கல்லூரி மாணவிகளைக் கல்வித்திணைக்களம் இப்பரீட்சைக்குத்தோற்ற அனுமதி வழங்கியபின் நடைபெற்ற இரண்டாவது பரீட்சைக்குத் தோற்றிய 19மாணவிகளைவிட, இவ்வாண்டில் மாணவிகளின் தொகையில் கணிசமான அளவு கூடியிருக்கிறது.

---

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் 'நிஸ்கோ' பிரிவு உத்தியோகத்தருக்கான கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 24ம்திகதி யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா ஆரம்பித்து வைக்கும் இக் கருத்தரங்கில் வடபிராந்திய தேசிய இளைஞர் சேவைமன்ற உதவி இயக்குனர், யாழ் மாவட்ட இளைஞர் சேவை அலுவலர், மற்றும் திணைக்கள உதவிஆணையாளர், பணிப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொள்கின்றனர். கருத்தரங்கிற்கான ஒழுங்குகளை யாழ்.மாவட்ட நிஸ்கோ முகாமையாளர் செல்வி எஸ். மகேஸ்வரி மேற்கொண்டு வருகிறார்.

நிஸ்கோவின் சேவைக்கு அரசமட்டத்தில் ஒத்துழைப்பைப் பெறும் நோக்கமாகவே இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(கர.தி)

# இன்றைய பலன்

மாசி மாதம் 11-ம் திகதி
புதன்கிழமை
(23—2—83)

மேடம்: புதிய நண்பர்கள் உங்களை உற்சாகமாக வரவேற்பார்கள் பொருள் வரவுக்கும் இடமுண்டு. உத்தியோகத்தர்களுக்கு மேலிடத்து ஆதரவு கிடைக்கும்.

இடபம்: சிறு தவறுகள் பெரிய நெருக்கடியை உருவாக்கலாம், ஏமாற்றங்கள் நிறைந்து காணப்படுகின்றன. தொழிலில் மறைமுக எதிர்ப்புக்கள் காணப்படுகின்றன.

மிதுனம்: கருடப்பார்வை உங்களை வட்டமிடும், வேண்டாதவர்களின் குறுக்கு வழித் தலையீடு உங்களை வேதனையில் ஆழ்த்தும், எதிலும் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

கடகம்: முத்தான சந்திப்பு ஒன்று கிடைக்கும், முதியவர் ஒருவரின் ஆதரவு ஏற்படலாம், கற்றதால் பயனும் உண்டாகும், பெண் ஒருவரின் நட்பு மகிழ்ச்சியைத் தரலாம்.

சிம்மம்: தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும், கடந்தகால எண்ணங்கள் அலைமோதும். அடுத்துக்கெடுப்பதற்கு சிலர் முனைவார்கள். சகோதர வழியால் சஞ்சலப்படுவீர்கள்,

கன்னி: போதும்என்றமனத்துடன் இருப்பீர்கள், எதிலும் நிறைவு தென்படும், முதியவர் ஒருவரின் வாகனம் உங்களுக்குச் சேரும், புதிய அன்பு மேலிடும்.

துலாம்: அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும், ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும், படித்தவர்கள் ஆலோசனையில் ஈடுபடுதல் நன்று:

விருச்சிகம்: தவறுகள் நடக்கலாம், நிலையும் தடுமாறும், நண்பர்களே காலை வாரிவிடக் கூடும், சிலருக்கு அன்னிய வாசம் ஏற்படலாம், யோசனையுடன் இருப்பது நன்று.

தனு: குளுமையான சம்பவம் இடம் பெறும், வாழ்க்கையில் பசுமை தோன்றும், குடும்பம் கலைக்கோயிலாக மாறும், இசைத்துறையில் அதிக ஆர்வம் பிறக்கும்.

மகரம்: நாள் எல்லாம் அலைச்சல், உடல் நலிவு தோன்றும், சூழ்ச்சி வலைபின்னும், அடுத்துக்கெடுப்பவர்கள் அருகிலேயே இருப்பார்கள், சற்று கண்டு போல் இனித்த வாழ்வு விரக்தி அடையும்.

கும்பம்: உள்ளப் படுதாவில் உவகைக் கூத்தாடும், உறவினர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள், பத்திரிகைத் துறையில்தொழில் புரிவோர் பாராட்டப்படுவார்கள்.

மீனம்: மாதுருவழிப் பெருமைக்கு இடமுண்டு. மனம் போல் யாவும் நடக்கும், இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

## மொஹலாய மன்னர்கால தங்கநாணயங்கள்!

சென்னை .பெப், 22

மொஹலாய மன்னர்காலத்தைச் சேர்ந்த 248 தங்க நாணயங்கள் வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கிராமமொன்றில் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

வீடு கட்டுவதற்கென நிலமொன்றை நான்கு பெண்கள் மேற்படி கிராமத்தில் துப்பரவு செய்து கொண்டிருந்த போதே உலோகப் பாத்திரமொன்றில் இந்த தங்கநாணயங்கள் இருந்ததை அவர்கள் கண்டுபிடித்தனர்.

தற்பொழுது அந்தநாணயங்கள் புதைபொருள் ஆராய்ச்சி பகுதியினரிடம் கையளிக்கப் பட்டுள்ளன.

(கி)

## தமிழகத்தின்...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ்நாட்டின் தற்போதைய அ. தி. மு. க. ஆட்சியில் நிர்வாகத் திறமையின்மை, நலிவுற்றமக்களுக்கு உணவுப் பிரச்சனையை உருவாக்கியமை, பிரச்சனைகளுக்கு எதிர்முகம் கொடுத்து அவற்றினைத் தீர்க்காமை ஆகிய குற்றச்சாட்டுகளை முன்வைத்தே மாநில அரசு எதிர்ப்பு தீவெட்டி ஊர்வலத்தை தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் நடத்த முயல்கிறது.

[உ]

## சமாதான...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

தல். இவை குறித்து வார்சா ஒப்பந்த நாடுகளும் நேட்டோ நாடுகளும்ஓர் ஒப்பந்தம்செய்து கொள்ள வேண்டும் என்ற புதிய பிரேரணை பிராக்கூட்டத்தில் வெளியிடப் பெற்றுள்ளது; இது மிக முக்கியமானதாகும். எந்த நாடுகளை நோக்கி இந்த முக்கியமான சமாதானப் பிரேரணை வெளியிடப் பெற்றுள்ளதோ, அந்த நாடுகள் இப் பிரேரணையில் பால் பூழு அக்கறை செலுத்தும் என்று உலக மக்கள் நம்புகின்றனர்'' என்று 'பிராவ்தா' தலையங்கம் கூறுகிறது.

## தமிழகத்துக்கு மத்திய அரசு தானியம்வழங்கும்

புதுடில்லி, பெப், 22

தமிழ்நாடுமாநில அரசு தமது மேலதிகக் கையிருப்பிலுள்ள அரிசியை மத்திய தானியத் தொகுப்புக்குக் கொடுக்க முன் வந்துள்ளதை அடுத்து மத்திய அரசு தமிழ்நாடு மாநில அரசுக்குத் தானியம் வழங்க முடிவு செய்துள்ளதாக மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஆர் வெங்கட்ராமன் தெரிவித்தார்.

தமிழ்நாடு மாநிலத்திற்கு மத்திய தொகுப்பில் இருந்து இம்மாதம் 28ம் திகதி தானியம் வழங்கப் படவுள்ளதாகவும் மத்தியபாதுகாப்பு அமைச்சர் மேலும் இதுபற்றிக் கூறினார்.

(உ)

## அகாலித் தலைவர்களுக்கு கோரிக்கை

புதுடில்லி பெப். 22

பஞ்சாப் மாநில சட்டமன்றம், டில்லி மத்திய ராஜ்ய சபா உறுப்பினர்பதவிகளை இராஜினாமா செய்யப்போவதாக அகாலித்தலைவர்கள் அறிவித்துள்ளமையை சற்றுத் தாமதிக்குமாறும், மறுபரிசிலனை செய்யுமாறும் மத்திய அரசின் விளையாட்டுத்துறை பாராளுமன்றவிவகார அமைச்சர் பூட்டாசிங் அகாலித்தலைவர்களைக்கோரியுள்ளார்,

அகாலித்தலைவர்களின்மேற்படி அறிவித்தலைமறுபரிசிலனை செய்யுமாறு ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சி உட்பட சகல எதிர்க்கட்சிகளும் கோரியுள்ளனர்.

(உ)

## பிஸ்கால் விற்பனவு

மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை

முத்து ஆறுமுகம், கரவெட்டி வடக்கு, கரவெட்டி.
வழக்காளி

வழக்கு இல: 14334.

எதிராக

கணபதிப்பிள்ளை நடராசா,
தனக்காகவும் பராயமற்ற அவரது பிள்ளைகள்
(1) வாஜினி, (2) சுபாஜினி (3) புஸ்பராஜா
என்பவர்களுக்காகவும் - எல்லோரும் கரவெட்டி
மேற்கு, கரவெட்டி.

எதிராளிகள்

மேற்சொல்லப்பட்ட எதிராளிகள் மேற்சொல்லப்பட்ட இலக்க வழக்கில் 1979ம் ஆண்டு தை மாதம் 17ம் திகதியில் தீர்வையின்படி ரூபா 9150/-ம் இன்னும் 1978-02-21லிருந்து 1979-01-17ம் திகதிவரை ரூபா 5000/- மீதான 12% வட்டி ரூபா 550/-ம்,1979-1-17ந் திகதியிலிருந்து 1981-12-09ந் திகதி வரை 9% சட்ட வட்டியும், செலவு ரூபா 751-22½ சதத்திற்கும் இதற்காக எதிரிகளுடைய கீழே சொல்லப்படும் ஆதனங்களின் சகல உரித்துக்களையும் பிரயோசனங்களையும் 28-4-83ம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு குறித்த ஆதனத்திலிருந்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படுமென இத்தால் அறிவிக்கின்றேன்.

விற்பனைசெய்யப்படும் ஆதனங்களின் அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று கரவெட்டி வென்றிக் குறிச்சியிலுறை அத்துளு தெற்கு நிபர. 27. எல்லை கிழக்கு அத்துளு கண்ணையம்மன்கோவிலாதனம். வடக்கு வீரவாகு முதலியார் சிற்றம்பல முதலியாரின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுரியவாதனம், மேற்கு தம்பு பெண் பிலிப்பாச்சிக்குடையவாதனம், தெற்கு நடைவரம்பு இதடங்கலிற் சொரியலாய் நெற் பர. 8 (எட்டு). இவ்வாதனத்தில் ரூபா 4000/-ஐ விற்காத தொகையை அறவிட வேண்டும்.

1970-9-13ல் நொத்தாரிசு க. கு. பாலசுப்பிரமணியம் முகதாவில் முடிந்த 3971ம் இலக்க உறுதியிற் காணிபித்த ஆதனங்கள்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று கரவெட்டி குறுக்குறிச்சியிலுறை.

1. தலையாட்டி சீமா நிபர. 15½. இதில் மேற்கரைவாசிக்குரிய நிபர 7¾ இதில் நடுப்பெற நாற்பதில் இருபது பங்குக்கு நிபர 3 குளி 15¾ இதில் தெற்குப் புறமாக நிபர 2 நீக்கி வடக்குப் புறமாக நிபர 1 குளி 15¾ கடைக் கட்டிடமும் எல்லை கிழக்கும் வடக்கும் பின்னூற் காணும் 2ம், 3ம் ஆதனங்கள் மேற்கு ரேட்டு தெற்கு ஒழுங்கை இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும்.

2. மேற்படி தலையாட்டிசீமா நிபர 15½ இதில் கிழக்குப் பக்கமாக அரைவாசிக்காக நிபர 7¾ வடலிகள், வேம்பு, கல்வீடு கிணறும் எல்லை கிழக்கு கையொழுங்கையும் சங்கரப்பிள்ளை கந்தரின் உரிமைக்காரருக்குடையவாதனம். வடக்கு குமாரசாமி பெண் இராசம்மாவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம். மேற்கு மேற்குறித்த 1ம் ஆதனமும் ஒழுங்கை முகப்பும் மறு ஆதனமும். தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், வடலிகள், வேம்பு, கிணறு இவைகளிற் சொரியவாய் மூன்றிலொரு பங்கில் அரைவாசியும் இக்காணிக்குட்பட்ட கல்வீட்டில் சொரியலாய் அரைவாசியும்.

3 மேற்படி தலையாட்டி சீமா நிபர. 15½ இதில் மேற்குப் புறமாக அரைவாசிக்குள்ள நிபர. 7¾ இதில் வடக்குப் புறமாக எண்பதிலொரு பங்கு குளி $1\frac{119}{160}$ எல்லை கிழக்கு மேற்குறித்த 2ம் ஆதனம் வடக்கு சின்னையா சின்னத்தம்பிக்குடையவாதனம், மேற்கு ரேட்டு, தெற்கு மேற்குறித்த 1ம் ஆதனம் இதடங்கலிற் சொரியலாய் மூன்றிலிரண்டு பங்கிலரைவாசியும்.

க. செல்வராசா
பிஸ்கால்
மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை.

மாவட்ட நீதிமன்றம்,
பருத்தித்துறை. 18-2-83

(6278)


கடைசி சிலதினங்கள்
ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி. ஞாயிறு 2-30
முரட்டுக் காளை

மனோகரா தினசரி
[யாழ்.நகர்] 10-30, 2-15
6-00, 9-45.
என். டி. ராமராவ், கே மாலதி, எஸ்.வி. ரங்காராவ், ரேலங்கி
பாதாள பைரவி

கடைசி சில தினங்கள்
வின்ஸர் (யாழ்.நகர்)
வசந்த மாளிகை
(புதிய பிரதி)

றீகல் [யாழ். நகர்]
கடைசிவாரம்
எங்க வீட்டுப் பிள்ளை

வெலிங்டன்
[யாழ் நகர்]
தினசரி 5 காட்சிகள்
Today only
LONG RIDERS

லிடோ [யாழ்: நகர்]
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
10-30, 2-00, 4-30, 7-00, 9-30
19--25
EYE OF THE NEEDLE
Adults Only
27-2-83 முதல் குரு

சாந்தி (யாழ். நகர்) 22—24 only
10-30, 2-30, 6-30, 9-45
Vijeyakumaratunka—Malini
Yasa Issuru—யச இசுறு
ACTION—COLOR—SINHALA

சில தினங்கள் மட்டும்
ராணி தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
ஆந்திரா முதலமைச்சர் என். டி. ராமராவ், ஜெமினி - சாவித்திரி நடித்த
மாயா பஜார்
வருகிறது!
தேடிவந்த மாப்பிள்ளை
(புதிய பிரதி)

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
தினசரி 10-00, 2-00, 6-00,9-30
ராஜா (யாழ்- நகர்)
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி (ஈஸ்ட்மன்கலர்)
பாடசாலை பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்து தரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.
எமது அடுத்த வெளியீடு
துணி வேதுணை

சகலவிதமான மணிக்கூடுகளையும்
உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ளவும்
புதிய மணிக்கூடுகளை வாங்கிக்கொள்ளவும்
டில்கா வாச் வேக்ஸ்
Dilka Watch Works
(Opposite Bus stand)
(பஸ்நிலைய எதிர் மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
போன் : 24174.

## குற்ற ஒப்புதல்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இல்லது தங்கத்துரை அளித்த வாக்குமூலத்தையும்.

13-8-81லும் 14-8-81லும் ஏ எஸ். பி ஹேமச்சந்திரா வுக்கு 6ம் எதிரி நவரத்தினம் நடேசுதாசன் அல்லது செனட்டர் அளித்த வாக்குமூலத்தையும்.

இவ்வழக்கு விசாரணையில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று எதிர்த்தரப்புச் சட்டத்தரணி என். சத்தியேந்திரா எழுப்பிய பிரச்னையைத் தொடர்ந்து. விசாரணைக்குள் விசாரணையாக 'வொயர்-டயர்' என்ற தனியான ஒரு விசாரணையை நீதிபதி மூன மலை நடத்தினர்.

நீதிபதி சி எல்.ரி மூனமலை முன்னிலையில் நேற்றுக் காலை நீதிமன்றம் பத்து மணிக்குக் கூடியது. தீர்ப்பு அளிக்க சுணங்குமெனத் தெரிவித்த நீதிபதி. உள்ளே சென்று மீண்டும் ஆசனத்துக்குவந்து பிற்பகல் 1-15 மணிக்கு தீர்ப்பு வழங்கப்படுமென்று அறிவித்தார்.

பிற்பகல் 1-15 மணிக்கு நீதிபதி தீர்ப்பை வழங்கினர். தீர்ப்பு 80 பக்கத்தில் எழுதப்பட்டிருந்தது.

இதனையடுத்து வழக்கு விசாரணை தொடர்ந்து நடந்தது.

தீர்ப்பை அடுத்து, ஏ. எஸ். பி. லால் மெண்டிஸ், ஏ. எஸ். பி. கனகசிங்கம், ஏ எஸ். பி. ஜூராம்பதி, ஏ. எஸ். பி. ஹேமச்சந்திரா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

திரு சத்தியேந்திரா இவர்களைக் குறுக்குவிசாரணைசெய்யவில்லை.

நீர்வேலி கொலை, கொள்ளை வழக்கின்போது கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் காவல்ஸ் டபிளாக இருந்த குணரத்தின பண்டார சாட்சியமளித்தார்.

இன்று தொடர்ந்து வழக்கு நடைபெறும்.

## இரு நாள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கும்' விழாவின் அஞ்சலி செலுத்தப்படுவதுடன் நாதஸ்வர வித்துவான் என். கே. பத்மநாதனுக்குப் பாராட்டும் இடம் பெறும். சிறப்புச்சொற்பொழிவாளராகத் தமிழகப் பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் கலந்து கொள்கிறார்.

யாழ் இந்துக் கல்லூரி அதிபர் திரு. பொ. ச குமாரசாமி தலைமையில் இன்றுபுதன் கிழமை பிற்பகல் 5-30மணிக்கு ஆரம்பமாகும் முதல் நாள் விழாவில் 'கம்பனடிப் பொடி'யின் உருவப்படத்தை திரு மு பொ. வீரவாகுவும் 'தேவனின்' உருவப்படத்தை யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும் திரைநீக்கம் செய்வார்கள். அடுத்து அஞ்சலி உரைகள். இதனையடுத்து "அன்னவர்க்கே சரண்" என்னும் பொருள்பற்றிப் பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் சொற்பொழிவாற்றுவார்.

நாளை வியாழக்கிழமை இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் யாழ். இந்து முன்னாள் அதிபர் திரு இ. சபாலிங்கம் தலைமையில் நிகழும் இவ்விழாவில் அரச விருதுபெற்ற நாதஸ்வர வித்துவான் என். கே. பத்மநாதன் பாராட்டிக் கௌரவிக்கப்படுவார். பலர் சிறப்புரை நிகழ்த்துவார்கள். "சந்திப்பு." என்னும் பொருள்பற்றி பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் சொற்பொழிவாற்றுவார். [அ]

## ஆலால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுடன் காரசாரமாக உரையாடினர்.

"யாழ்-பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சம்பந்தமாகவே உரையாடல் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

"உம்மைக் கொலை செய்ய வரவில்லை. எச்சரிக்கை செய்யவே வந்திருக்கிறோம்', என்று எச்சரித்து, அங்கு வந்திருந்த மூன்று இளைஞர்களில் ஒருவர் எம். பி.யை நோக்கி கைத்துப்பாக்கியால் 'டுமீல் - டுமீல்' எனத் தொடர்ந்து சுட்டாராம்.

"சுட்டுப்போட்டார்கள்" என்று எம்.பி. சத்தம் போட்டதும், சத்தம் கேட்டு அவரது மனைவி வந்தபோது ஒருவர் ... வெளி ஹோலுக்கு வரவிடாமல் கதவைச் சாத்திப் பூட்டினாராம், அதேநேரம் எம்,பி,யின் அலுவல்கள் சம்பந்தமாக அலுவலக அறையில் தட்டச்சு இயந்திரத்தில் 'டைப்' செய்துகொண்டிருந்த எம்,பி,யின் செயலாளர் திரு. ஐ. இரத்தினம் துப்பாக்கிச்சூட்டுச் சத்தம் கேட்டு ஓடிவந்து இளைஞர்களில் ஒருவரைக் கட்டிப்பிடித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினத்தின் இடது பக்கத் தொடையில் குறிப்பிட்ட நபர் பேனாக் கத்தியால் தாக்கிவிட்டு மூன்று இளைஞர்களும் ஹாலைவிட்டு வெளியேறினர் என்று விசாரணையில் கூறப்பட்டது.

பின்னர் வீட்டுக்கு வெளியில் நின்ற 'ஜீப்' வண்டியின் முன் பக்கத்திலுள்ள இரு டயர்களையும் கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டு மேலும் ஒருவருடன் சேர்ந்து சைக்கிள்களில் தப்பியோடிவிட்டனர்.

நான்கு இளைஞர்களும் செல்லும்பொழுது துண்டுப் பிரசுரங்களையும் வீசிவிட்டுச் சென்றனராம்.

துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்த எம். பி திரு. ஆலாலசுந்தரம், அப்பொழுது வந்த வ-பி - பேர - சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றில் உடனடியாக யாழ்-ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்- ஆஸ்பத்திரியில் உடனடியாக 'எக்ஸ்ரே' பிடிக்கப்பட்டது. 'எக்ஸ்ரே' படத்தில் வலதுபக்க இடுப்புமுட்டுப்பக்கமாக துப்பாக்கிக் குண்டு ஒன்று இருக்கக் காணப்பட்டது-

மேலும் இடதுகால் பக்கத் தொடை, முழங்கால் பக்கங்களில் துப்பாக்கிச் சன்னங்களின் சிறுஉரசல் காயங்கள் காணப்பட்டன.

காயங்களிலிருந்து அதிகமான இரத்தம் வெளியேறியதால், எம்-பி- சற்றுக் களைப்படைந்து காணப்பட்டார்.

நேற்றிரவு அவருக்குச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது- மதிய உணவு ஜீரணிக்காததால் 9மணிவரை சத்திர சிகிச்சை செய்யமுடியாமலிருப்பதாகவு ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன-

கோப்பாய் எம்-பி- சுடப்பட்ட செய்தி கேட்டதும் யாழ்-மாவட்ட எம், பி.களும், யாழ். அரசாங்க அதிபர் யாழ்- மாவட்ட சபைத் தலைவர், யாழ்- மாநகரசபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், பொதுமக்கள் ஏராளமாக யாழ்- ஆஸ்பத்திரியில் கூடிநின்று எம், பி, யின் உடல் நிலைகுறித்து அங்கலாய்த்தனர்.

வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆனந்தராசா உடனடியாக எம்-பி-யின் இல்லத்திற்குச் சென்று பார்வையிட்டார்- பொலிசார் உடைந்த நிலையில் காணப்பட்ட ஏழு துப்பாக்கிச் சன்னங்களையும் கண்டெடுத்தனர்- '450 ரக கைத்துப்பாக்கி பாவிக்கப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவந்தது-

### கடைசிச் செய்தி

கோப்பாய் எம். பி. க்கு மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையின்போது, ஒரு துப்பாக்கிக் குண்டு அகற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவர் எதுவித ஆபத்தான நிலையிலுமில்லை என்று ஆஸ்பத்திரி அதிகாரிகள் தெரிவித்தனர். (மா)

## உபாலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுவதாகவும், கடலில் மிதக்கும் இச்சிதைவுகள் காணமற்போன உபாலி விமானத்தைச் சேர்ந்ததென்றும் ஊர்ஜிதப் படுத்தப்பட்டுள்ளது.

உபாலி விஜேவர்த்தன பயணம் செய்த விமானத்தின் சில்லு ஒன்று இந்தோனேஷியாவில் மெடானுக்கு தென்மேற்கே அறுபதுமைல் தொலைவில் தஞ்சுங் பாலை கடலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

அமெரிக்காவிலுள்ள லியர் ஜெட் கூட்டுத் தாபனமும், கொழும்பிலுள்ள உபாலி விமானக் கம்பெனி நிறுவனமும் அடையாளங்களைக் கொண்டு, உபாலி 'ஜெட்' விமானத்தின் சில்லு என ஊர்ஜிதம் செய்துள்ளன.

மெடானுக்கு அறுபது மைல் தொலைவிலுள்ளது தஞ்சுங் பாலைக் கடல் மீனவர்களே இந்தச் சில்லைக் கண்டெடுத்து. உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். பொலிஸ் இன்ஸ்பெக்டர் மெடானிலுள்ள உபாலி விமான தேடுதல் நிலையத்தில் ஒப்படைத்தார்

மெடானில் இப்போது தங்கியிருக்கும் உபாலி நிறுவன உத்தியோகத்தர்கள், குறிப்பிட்ட சில்லினைப் பார்வையிட்டு. அமெரிக்கா, கொழும்பு ஆகிய இடங்களுடன் தொடர்பு கொண்டனர்.

கடந்த திங்கட்கிழமை மாலை உபாலி விமானத்தின் சில்லுதான் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

## குடும்ப..,

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டன. வெற்றிபெற்றவர்களுக்கு பிராந்தியசம்மேளனப் பரிசுகள் வழங்கப்பட்டன. நடப்பாண்டில் சுமார் மூவாயிரம் புதிய கிராமப்புற தொண்டர்கள் சங்கத்தில் சேருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் எதிர்வரும் தொண்டர்சம்மேளனங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படக்கூடும் எனதெரியவருகிறது"

## விலை அதிகரிப்பு

[கொழும்பு]

கோதுமை மா, அரிசி, பாண் ஆகியவற்றின் விலைகள் நேற்றுமுன்தினம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## குண்டு வீச்சு

[வேலணை]

புளியங்கூடல் சந்தியிலுள்ள வசாயப் பயிர்களுக்கான ருமிநாசினி விற்பனைக் கடைக்கு அதிகாலை குண்டு வீசப்பட்டு கூரை சேதமடைந்தது.

சந்தேகத்தின்பேரில் சுந்தரம் ஸ்ரீபதியைப் பொலிசார் தேடுகின்றனர்.

## அமிர் கண்ட...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறு கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரம் நேற்று சுடப்பட்டது சம்பந்தமாக தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சென்றிருந்த திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுக் காலை கொழும்பு திரும்பினார்.

அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"வன்முறை எந்தப் பிரச்னையையும் தீர்க்கமாட்டாது என்பதை நாம் ஏற்கனவே கூறியுள்ளோம்.. இன்றும் கூறுகின்றோம்.

"கையில் ஆயுதமேந்திவிட்டால், அதைக்கொண்டு எவரையும் தாம் சொல்லும் வழியைக் கைக்கொள்ளச் செய்யலாம் என்று இளைஞர்கள் சிலர் கருதுகின்றனர்.

"திரு. ஆலாலசுந்தரம் சுடப்பட்ட சம்பவத்துக்குக் காரணம் எதுவாக இருந்தாலும் இதை தமிழ்மக்களுக்கு விடப்பட்ட சவாலாக ஏற்று இதற்குப் பொறுப்பானவர்களுக்குத் தக்க பாடம் படிப்பிக்கவேண்டிய நாள் வந்துவிட்டது.

"கடந்தகாலத்தில் பல வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கியபோது, தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் இவற்றைக் கண்டித்து. வன்முறைகளைத் தவிர்க்குமாறு இளைஞர்களை வேண்டினேம்.

"தமிழ் மக்களின் அரசியல் வாழ்விலும், பொது வாழ்விலும் இன்று நிலைபெற்றுவிட்டதாகத் தோற்றுகின்ற இந்த வன்முறையைக் களைந்து, தந்தைசெல்வா காட்டிய சாத்வீக வழியில் எமது இன விடுதலைப் போராட்டத்தை நடத்தத் தமிழ் மக்கள் சங்கற்பம் பூணவேண்டும்.

"இளைஞர் சமுதாயத்தில் மிகவும் பெரும்பாலானவர்கள் இந்த வெறிச் செயலை எதிர்ப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். இவர்கள் அனைவரும் இணைந்து இதற்கொரு முற்றுப்புள்ளிவைத்து, சாத்வீக வழியில் இயக்கத்தை நடத்த அணிதிரளவேண்டும்".


## மரண அறிவித்தல்

### செல்வி த. செல்வராணி

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி த. செல்வராணி 17-2-83 வியாழக்கிழமை குவைத்தில் அகால மரணமானார். இவர், தம்பிராசா- சரஸ்வதியின் சிரேஷ்ட புதல்வியும், ஜெயபாலன் (பிரான்ஸ்), ஜெயராணி, பாலசுப்பிரமணியம், சூரியபாலன், சந்திரபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை (23-2-83) பிற்பகல் 4 மணியளவில் ஈமக்கிரியைக்காக அன்னாரது இல்லத்திலிருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

திரு. திருமதி தம்பிராசா குடும்பத்தினர்

6297

## மரண அறிவித்தல்

### திருமதி யசிந்தா விஜயக்கோன்

திருமதி யசிந்தா விஜயக்கோன் காலமானர். இவர் திரு இன்னாசிமுத்து விஜயக்கோனின் அன்பு மனைவியும், ரவிராஜ், அனுஷா, சாளினி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு சூசைப்பிள்ளை அருளானந்தத்தின் அன்பு மகளும், திருமதி தங்கரெட்ணம் இன்னாசிமுத்துவின் அன்பு மருமகளும், திரு. A R. ஜெயானந்தம் (Engineering Works Prop.), திருமதி நிர்மலா அன்ட்றூ, திருமதி நிற்செலா செல்வராஜா, திருமதி மரிஸ்ரெலா அருளானந்தன். திருமதி அருள்மலா பீற்றர், திருமதி வனஜா அருமைநாயகம், திருமதி விஞ்செலா பொஸ்கோ, செல்வன் கருணாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு J A. அன்ட்றூ (நில அளவையாளர்), திரு. R. செல்வராஜா (Staff Assistant, யாழ். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை), திரு. R அருளானந்தன் (மனேஜர், மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி), திரு B. பீற்றர் (மேற்கு ஜேர்மனி), திரு. B A அருமைநாயகம் Staff Officer, இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி), திரு பொஸ்கோ அருமைநாயகம் (Accountant, Royal Guard Brigade Oman), திருமதி செல்வநாயகி ஜெயானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை (23-2-83) பிற்பகல் 4-30 மணிக்கு 28, ரேப்பிள் வீதியிலுள்ள இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக புனித சென்ஜேசி மாதா பேராலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

6292

யாழ். நகரில் உன்னதமான சேவையளிக்க

வரவேற்கிறது!

யாழ். சைனிஸ் றெஸ்ரோறன்ட்

(YARL CHINESE RESTAURANT)

23-02-1983 புதன்

ஆரம்பிக்கப்படும் எமது ஸ்தாபனம்

27-02-1983 ஞாயிறு

முதல் வாடிக்கையாளருக்குச் சேவை அளிக்கும் என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

யாழ்.

சைனிஸ் றெஸ்ரோறன்ட்

"இளாவ் கவுஸ்"

1-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

6299


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ... 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81 Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.